உள்நாடு வருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு ,, ரூ. 5-0-0

R. No. M. 3066 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.
ஆசிரியர்:- ஈ. வே. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-ஹு புரட்டாசி-மீ 1-உ (16—9—1934) | மலர் 4.

# இனாம்! சந்தாதாரர்களுக்கு இனாம்!

## அருமையான புத்தகங்கள் இனாம்!

நமது "பகுத்தறிவு" பத்திரிகைக்கு செப்டம்பர் மாதம் 1-உயிலிருந்து அக்டோபர்1-உக்குள் முன்பணம் மணியார்டரில் அனுப்பி புதுசந்தாதாராராய்ச் சேருகிறவர்களுக்கு 8 அணா விலையுள்ள அடியில்கண்ட புஸ்தகங்களில் எது இஷ்டமோ அதை இலவசமாய் புக்போஸ்டில் அனுப்பிக்கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| கைவல்யம் | | 0–8–0 |
| இந்தியாவின் குறைபாடு | | 0–8–0 |
| இராமாயண ஆராய்ச்சி (அயோத்தியாகாண்டம்) | | 0–8–0 |
| மாதர் சுதந்திரம் or பெண்மக்கள் பெருமை | | 0–8–0 |
| லெனினும், மதமும் | அணா 4 | 0–8–0 |
| பொதுவுடைமைத்தத்துவம் | ,, 3 | |
| போல்ஷ்விக் முறை | ,, 1 | |
| கடவுளும், பிரபஞ்சமும் | அணா 4 | 0–8–0 |
| சோஷியலிசம் | ,, 3 | |
| இலங்கை உபந்யாசம் | பை 6 | |
| சமதர்ம உபந்யாசம் | ,, 6 | |

மானேஜர், "பகுத்தறிவு", ஈரோடு.

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 | உழைப்பாளிகளுக்குஏன்இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 | சாமிகளின் அடிமை | 0-12-0 |
| விவாக விடுதலை | 0-4-0 | லோகல்போர்டுஆக்ட் (சென்னை) | 2-0-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 | பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| | | காந்தி-கிட்டு | 0-1-0 |
| The Right of Temple Entry | Re. 1—0—0 | The Crux of the Indian Problem | Re. 1—0—0 |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## பகுத்தறிவுக்கழக வெளியீடுகள்.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு

ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M. A.

இந் நூல் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்ஹாம் நகரத்துப் பாதிரியார் ரெவரெண்ட் ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் எம். ஏ. அவர்கள் பிரமச்சரியம் என்னும் பெயரால் பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணு 4

### மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

இந்நூலில் மரணத்திற்குப் பிறகு ஜீவன் உண்டா? என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணு 4.

### மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். இதில் பல அரிய ஆராய்ச்சியும், சிறந்த அபிப்பிராயங்களும் அடங்கி இருக்கின்றன. விலை அணு 4

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், ஈரோடு.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக 3-ம் வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு 1 வருஷமாலை பைண்ட் செய்ததுகிரயம் ரூ. 3—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

கௌரவ ஆசிரியர்:—

S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.

ஆசிரியர்:—

சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0
தனிப்பிரதி விலை அணு ஒன்று.
விலாசம்:—
மானேஜர்,
"வெற்றி முரசு" மாயவரம்.

### "சமதர்மம்."

ஆசிரியர்:—

வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ. 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.
விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை

ஆசிரியர்:—

மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திருச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ. 3—0—0
விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

# கடவுளும், பகுத்தறிவும்.

(கொளும்பு தோழர் I. M. இப்ருஹீம்)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

முஸ்லீம்களுடைய மசூதிகளைத்தான் "உண்மையான பிரபஞ்ச சர்த்தாவாகிய கடவுளை" வணங்கும் இடம் என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் உண்மையான தெய்வத்தை வணங்குவதாகச் சொல்லும் முஸ்லீம்களின் மசூதிக்கும், உண்மையற்ற (கடவுளுக்கு விரோதமான) கடவுளை (விக்கிரகங்களை) வணங்கும் மற்ற ஆலயங்களின் கதி ஏதோ அதோகதிதான் கிடைத்திருக்கிறது. அதாவது பீஹார் பூகம்பத்தினால் நூற்றுக்கணக்கான மசூதிகள் இடிந்து தரைமட்டமாகின.

பீஹாரில் அழிந்த மசூதிகளைத் திரும்பக்கட்டுவதற்கு "மஸ்ஜித்கமிட்டி" ஏற்படுத்திப்பணம் வசூலிக்கும்முஸ்லீம்களே! பணத்தை வீணே நாசமாக்கி மஸ்ஜித்களைக் கட்டாதீர்கள். கடவுளுக்கு மஸ்ஜித்கள் தேவையில்லாததினால் தான் அவர் பூகம்பத்தையுண்டுபண்ணி மஸ்ஜித்களை தரைமட்டமாக்கிப்போட்டார். "எனது சிருஷ்டிகளாகிய மனித சீவன்களில் அநேக ஏழைகளுக்குக் குடியிருக்க ஓட்டைக் குடிசையுமில்லாமல் தெரு ஓரங்களில் சீரழிந்து கிடக்கும்போது எனக்கு எதற்கு அழகிய மசூதிகள்" என்று கருதி கடவுள் மசூதிகளை தரைமட்ட மாக்கிப்போட்டார். மஸ்ஜித் கமிட்டி யார் பணஞ் சேர்த்திருந்தால், பொது ஜனங்களிடத்திலிருந்து வசூலித்த பணத்தை 'அல்லாஹ்'வுடைய பேரால் மசூதிகளைக் கட்டி வீணாக்காமல் வீடில்லா ஏழை மக்களுக்குச் சிறு விடுதிகளை அமைத்துக்கொடுங்கள். "மஸ்ஜித் கமிட்டி"க்கு அறிவுறுத்தி பிரத்தியேகமான கட்டுரை எழுதுவதற்கு எனக்குச் சிரமத்தைக் கொடுக்காமல் பகுத்தறிவைக்கொண்டு ஆழ்ந்து ஆராய்ச்சி பண்ணி கௌரவமாய் நடந்து கொள்ளுங்கள் தோழர்களே!

பீஹாரில் ஏற்பட்ட பூகம்பம் லோகாயுதமே சுவர்க்கமென ஒப்புக்கொண்டு கடவுளையும், மதத்தையும் ஒழிக்கும் நாஸ்திகர்கள் நிறைந்த ஸோவியத் ருஷியாவில் மாத்திரம் ஏற்பட்டிருந்தால் கடவுளின் வக்கீல்களாகிய ஆஸ்திக சிகாமணிகள் சுயமரியாதைக்காரர்களை சும்மா விட்டு விடுவார்களா? என்ன சொல்வார்கள் தெரியுமா? "இனிமேலாவது ருஷிய நாஸ்திகர்களுக்குப் புத்தி வருமா? ஆலயங்களைத் திறப்பார்களா? ஆண்டவனை வணங்குவார்களா? கடவுளையும், மதத்தையும் எதிர்த்த சுயமரியாதைக்காரர்களுக்கு புத்திவருமா? பார்த்தீர்களா நாஸ்திகர்களே! கடவுளின் வல்லமையை. நாஸ்திக ருஷியாவை எல்லாம் வல்ல கடவுள் ஒரு ஆட்டு ஆட்டுவித்தார். ருஷியப் பொதுவுடைமைக்காரர்களாகிய நாஸ்திகர்கள் எல்லாம் "கடவுளே என்னைக்காப்பாற்று! கடவுளே என்னை காப்பாற்று!! கடவுளே என்னை காப்பாற்று!!!" என்று (ருஷியர்கள்) நாஸ்திகத்தையும், சமதர்மத்தையும் மறந்து திக்கு த்திக்காய் ஓடிவிட்டார்கள்" என்று உலகத்திலுள்ள ஆஸ்திகப்பத்திரிகைகள் அத்தனையும் கொட்டை யெழுத்தில் "நாஸ்திக ருஷியாவிற்கு கடவுளின் எச்சரிக்கை," 'கடவுளை மறுத்த சமதர்ம ருஷியாவின் கதி" "ஆண்டவனை மறுத்த ருஷியாவின் அழிவு" "முதலாளி, தொழிலாளி, உள்ளவன், இல்லாதவன் என்னும் கடவுள் விதித்த விதியை அழிக்க முயன்ற ருஷியாவிற்கு கடவுளின் எச்சரிக்கை............." என்பன போன்ற தலைப்புக்களையிட்டு பத்திரிகைகளின் பக்கங்களை யெல்லாம் நாசமாக்கியிருக்கும். அத்துடன் நின்று விடாமல் இது தான் சமயம் என்று முதலாளி அரசாங்கங்கள் எல்லாம் "சமதர்மக் கொள்கை ஆண்டவனின் சட்டத்திற்கு நேர்விரோதமானது" "அச்சமதர்மக் கொள்கையைக் கையாண்டதினால் தான் ஸோவியத் ருஷியாவில் கடவுள் பூகம்பத்தையுண்டு பண்ணி தண்டித்தார்" என்று பாமரமக்களை யேமாற்ற மதாச்சாரிகளை ஏவுவார்கள். முதலாளி அரசாங்கங்கள் எல்லாம் மதாச்சாரிகளுக்குப் பொருளை அள்ளிக்கொடுத்து அறிவில்லாப் பொது ஜனங்களை ஏமாற்றி சமதர்மக்கொள்கையை எதிர்க்கச்செய்வார்கள். இந்தப் பிரசாரத்தில் ஹிட்லர் முதன்மையானவராகவும், முஸோலினி இரண்டாவதாகவும், தொழிலாளர் பிரதிநிதியாய் வந்து மந்திரியான ராம்ஸே மெக்டோனல்ட் அந்தரங்கத்தில் உளவாளியாகவும் வேலை செய்வார்கள். இந்த அக்கிரமப் பிரசாரத்திற்கு நோபல் பரிசு அளிப்பதானால் அப்பரிசு ஹிட்லருக்குத் தான் கிடைக்கும்.

பூகம்பம் ஏற்பட்டு உலகம் எல்லாம் அழிந்து போனாலும் நானும் "கடவுளும்" பாக்கியிருப்போமேயாகில் யான் கடவுளிடத்தில் என்ன கேட்பேன் தெரியுமா? ஓ சர்வவல்லமையுள்ள யோசனை அற்ற கடவுளே! ஓ சர்வஞானம் உள்ள பகுத்தறிவற்ற கடவுளே!! ஓ திரிகாலமூர்த்தி யென்னும் முக்காலத்தையும் அறியாத கடவுளே!!! இப்போது, ஒன்று மறியாத பாலகர்களைத் தண்டித்ததற்கு பதில் சொல்லித்தீரும்? என்று கேட்பேன்.

"பிராமணர்கள் ஹரிஜனங்களைக் கோவில்களுக்குள் பிரவேசிக்க விடாததினால் கடவுள் பூகம்பத்தை யுண்டு பண்ணினார்" என்றால் பிராமணர்களை மாத்திரமல்லவா தண்டிக்க வேண்டும்? முஸ்லீம்களையும், கிறிஸ்தவர்களையும், ஒன்று மறியாச்சிசுக்களையும் இக்கடவுள் தண்டித்ததேன்? பிராமணர்கள்செய்யும் அக்கிரமத்திற்கு ஒன்று மறியாச்சிசுக்களையும், முஸ்லீம்களையும், கிறிஸ்தவர்களையும் இக்கடவுள் பூகம்பத்திற்குட்படுத்தி சித்திரவதை செய்ததேன்? பிராமணர்கள் செய்த குற்றத்திற்கு குற்ற மற்ற பாலகர்களும், முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் பலியாவதா? தோழர்காந்தியாரே பதில் சொல்லுங்கள். அல்லது 35 கோடி இந்திய மக்களை "கடவுள், மதம், தேசீயம், சுயராஜ்யம்,......'; என்பவைகளின் பெயரால் மூட நம்பிக்கையில் ஆழ்த்தாமல் உலக மனுஷாபிமானம் கொண்ட சமதர்மத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு அதை (சோஷியலிஸத்தை) உம்மை "மஹா ஆத்மா" என்று பின் பற்றிய பாமர மக்களுக்கு எடுத்துப்போதித்துவருவீர்களாக 100-க்கு 100 (தீவிர) சமதர்மிகள் விருப்பம் போல் நடக்க தங்களுக்கு இஷ்டமில்லா விட்டால் தயை செய்து பாமர மக்களை யேமாற்றாமல் ஹிமய மலைக்குப்போய் தவம் செய்து தங்களது "மாண்புமிக்க கடவுளை" வணங்கிக்கொண்டிருட்பீர்களாக. அல்லது கோவிலுக்குப்போய் ஓர் மூலையில் "மஹா ஆத்துமாக்களை"ப்போல் அழகாக உட்கார்ந்து கொண்டு "கடவுளே! இந்தியாவிற்கு பிரிட்டிஷாரிடமிருந்து சுயராஜ்யம் வாங்கிக்கொடு, இல்லா விட்டால் உண்ணாவிரதம் இருந்து உயிர்துறப்பேன்" என்று சொல்லிக்கொண்டு பிடிவாதமாயிரும். அப்போது கடவுள் ஒரு வேளை உமது பேரில் இரக்கப்பட்டு "ஐயோ பாவம் எனது பக்தன் சுயராஜ்யம் கொடுக்காவிட்டால் உண்ணாவிரதம் இருந்து தற்கொலை புரிந்து கொள்வான்" என்று கருதி உமக்கு இதற்கு முன் அறிவித்த கடவுளின் வயர்லெஸ்ஸாகிய "அசரீரி" மூலமாக "பக்தனே பிரிட்டிஷார்களையெல்லாம் இந்தியாவை விட்டு ஓட்டிவிட்டேன். நீர் போய் உமது இஷ்டப்படி இந்தியாவை ஆட்சிபுரியும்" என்று அறிவிப்பான். அப்படிக் கடவுள் சொல்லாவிட்டால் உமது மேன்மைதங்கிய—தெய்வத்தன்மை வாய்ந்த உண்ணாவிரதத்தால் உமது "ஆத்துமா" வானுலகை நோக்கியிருக்கும்.

"மிர்ஸா சாஹிபை கடைசி நபியாக ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் தான் இந்த பூகம்பம் ஏற்பட்டது" என்றால் மிர்ஸாசாஹிபை நபியாக ஏற்றுக்கொண்ட அஹ்மதிகளில் ஒருவராவது இந்த பூகம்பத்தினால் இறக்க வில்லையா? மிர்ஸாசாகிபுடன் "வஹி" ("அசரீரி") மூலமாக பேசமுடியுமானால்கடவுள் அகில உலகத்தவர்களுக்கும் "மிர்ஸாசாகிப் நபி" என்று ஒரு வார்த்தை சொல்லிவிடுவது தானே! ஏன்? மனிதனே அவனுடைய சுய அறிவால் கண்டுபிடிக்கப்பட்ட ஆகாய வசனி மூலமாக அகில உலகத்தவர்களுக்கும் விரும்பிய விஷயங்களை யெல்லாம் அறிவிக்கிறான். ஆனால் "சர்வவல்லமையும், சர்வஞானமும் உள்ள கடவுளு"க்கு ஏன் முடிய வில்லை? கடவுள் விரும்புகிற தென்றால் அவருடைய விருப்பப்படி அகில உலகமக்களுக்கும் "மிர்ஸாசாகிப் எனது தூதர். (நபி) இஸ்லாம் மதம் என்னால் உலகத்திற்குப் பொதுவாக அளிக்கப்பெற்ற உண்மையான மதம். எல்லாவற்றையும் படைத்து ரட்சித்து வரும் உலகத்தின் சர்வாதிகாரியாகிய நான் (கடவுள்) இருக்கிறேன். இவைகள் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு எனது தீர்க்கதரிசியை பின்பற்றி எனக்குத் தலைசாய்க்க வேண்டும்" என்று கடவுளின் வயர்லெஸ்ஸாகிய "வஹி" மூலம் சொல்லி விடுவதுதானே! அந்தப்படி சொல்லி விட்டால் உடனே ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்சள், யூதர்கள்........முதலிய உலகத்திலுள்ள எல்லா மதஸ்தர்களும் அவரவருடைய மதங்களையும், மதங்களின் பெயரால் ஏற்பட்ட நூற்றுக்கணக்கான பிளவுகளையும் கடவுளின் உண்மைக்கு விரோதமானது, பொய்யானது என்று விட்டுவிட்டு, இஸ்லாம் மதம் ஒன்று தான் உண்மையான மதம் என்று நம்பிவிடுவார்கள். பிற்பாடு உலகத்தில் மதச்சண்டைகளும், அதனால் ஓடும் இரத்த வெள்ளமும், கட்சி பிளவுகளும் அதனால் மண்டை உடைதல்களும் ஒழிந்து அகில உலக மக்களும் ஒற்றுமைப்பட்டு சகோதரர்களாய் வாழ்வார்கள். உலகம் சாந்தியாயும், சமாதானமாயும் திகழும். "நரகத்திற்"கு ஆள் இல்லாமல் போய்விடும். "சுவர்க்க"த்தில் இடம்போதாமல்எல்லாம் நிரம்பி விடும். "ஸைத்தா"னுக்கும் வேலையில்லாமல் போய் விடும் என்பவைகளைக் கருதித்தான் கடவுள்உலக மக்கள் எல்லோருக்கும் யான் மேற்சாட்டிய பிரகாரம் அறிவிக்காமல் இருந்து விட்டார் போலும்! ஹா! கடவுளுக்கு எவ்வளவு அறிவு! எவ்வளவு ஞானம்!! எவ்வளவு மூளை!!! எவ்வளவு அன்பு!!!! எவ்வளவு அருள்!!!!! இவரை வர்ணிக்க யாரால் தான் முடியும்? தோழர்களே இவரை புகழாத நாவும் ஓர் நாவா? இவரை வணங்காத மனிதனும் ஓர் மனிதனா? வாசகர்கள் தான் கடவுளின் யோக்கியதையை முடிவு செய்து கொள்ள வேண்டும்.

உலகத்தில் 200-கோடி மக்கள் இருக்கும்போது இந்த சாஹிபிடமும் (மிர்ஸா சாஹிபிடமும்) இதற்கு

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

# சக்லத்வாலா

## சோவியத் ரஷியாவில் கண்டதென்ன?

(C. R. D.)

தோழர் சக்லத்வாலா அவர்கள் ஓர் இந்தியர். பார்சிவகுப்பைச் சேர்ந்தவர். அவர் பொதுவுடைமைக் கொள்கைக்காரர். அவர் இங்கிலாந்தில் பார்லிமெண்ட் மெம்பராக இருந்தவர். அவர் சமீபத்தில் ரஷியாவுக்குச் சென்று ஆங்கு சுமார் மூன்றரை மாதங்கள் வரை தங்கி சோவியத் ஐக்ய குடியாட்சிக் குட்பட்ட ஆசியாப்ர தேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு சென்ற மாதம் (ஆகஸ்டு) 12ம் தேதி ஞாயிற்றுக்கிழமை லண்டன் நகருக்குத் திரும்பினார். அப்போது லண்டனில் அவருக்கு ஓர் குதூகலமான வரவேற்பும் நடந்தது. இதற்கு முந்தியும் அவர் இரண்டு தடவைகள் ரஷியா சென்று வந்தவர். ஆனால் இந்தத்தடவை அவர் சோவியத் ஆட்சி முறையின் ஒவ்வொரு அம்சத்தையும், மிகவும் சாவதானமாகவும், நுட்பமாகவும் கவனித்தறிந்து வந்திருக்கிறார்.

தோழர் சக்லத்வாலா முதன் முதலில் மாஸ்கோவிற்கும், லெனின்க்ராட்டிற்கும் சென்றார். மேற்கண்டவிடங்களிலிருந்தபடியே 80 லக்ஷம் சதுரமைல் விஸ்தீரணமும், 17 கோடி பிரஜைகளையும் கொண்ட சோவியத் ரஷியா அடைந்திருக்கும் முற்போக்கையும், வெற்றியையும் ஒருவாறு அறிந்தோடு, அவர் வால்கா நதிக்கும், அதன் கிளைநதி காமா வுக்கும் பக்கமாயுள்ள காசன் என்னும் நகரத்தைச் சார்ந்த டார்டார் குடிஅரசுப்ரதேசங்களுக்கும் சென்றார். அங்கு அவர் கண்டகாட்சிகள் அவருக்கு அளவு கடந்தமனோரம்மியத்தைக் கொடுத்தன. தொழிற்சாலைகள் நிறைந்த கார்க்கி, ஐவனோட், பாலகானு, எரோஸ்லாவ், என்னுமிடங்களுக்கும், பிறகு ஸ்வெர்ட்ல- வக்ஸ், காசன் என்னும் பட்டணங்களுக்கும் சென்று பார்வையிட்டார். பின்பு காசன் நகரத்தைச் சுற்றி ஏறக்குறைய இருபது மைல் வட்டத்திற்குப் பிரயாணம் செய்து ஆங்கு கூட்டுப்பண்ணை விவசாயமுறையைக் கவனித்தார்.

அதன்பிறகு தோழர் சக்லத்வாலா அவர்கள் சோவியத் ஐக்கிய குடியாட்சிக் குட்பட்ட எஷியாடிக், காகேஷியன் குடிஅரசுப்ரதேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தார். இப்பிரயாணத்தில் அவர் மிகுதியும் முக்கியமும், மேன்மையுமான விஷயங்களைக் கற்றார். டாஷ்கெண்ட், பொர்கானு, சாமர்கண்ட் என்னுமிடங்களைக் கொண்ட உஸ்பெகிஸ்டான் குடிஅரசுப் பிரதேசங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார். அங்கிருந்து அவர் உலகத்தின்பல பாகங்களிலிருந்தும் ரஷியாவைப்பார்க்க வந்திருந்த அநேக தோழர்களுடனே புறப்பட்டு டாட்வுகிஸ்டான் சோவியத் குடியரசின் புதியதலைநகரமான ஸ்டாலினாபாட்டையும், அதன் சுற்றுப்புறவூர்களையும் சென்று பார்த்தார். பிறகு துருக்கிஸ்தானத்தின் தலைநகரமான அஷ்காபாட்டுக்கும் ஆங்கிருந்து காஸ்பியன் கடலோரமாயுள்ள க்ராஸ்னோ வாட்ஸ்க் என்னும் நகரம் வரையில் சென்று பிறகு அஸராபெய்ட்ஜன், ஜ்யார்ஜியா, ஆர்மேனியா ஆகிய விடங்களடங்கிய ஐக்கிய குடியரசு நாடுகளுக்குப் புறப்பட்டார். தோழர் சக்லத்வாலா தன் திரும்புப்பிரயாணத்தில் ஓஸ்ஸேடியா நாட்டின் புதிய தலைநகரமான ஆர்ஜெனிக்யாஜீ என்னும் பட்டணத்திலும், பெரிய தொழிற்சாலைகள் நிறைந்த கார்க்கோவ் நகரத்திலும், உக்ரெய்ன் நகரத்திலும் தங்கி ஆங்காங்குள்ள நிலவரங்களைக் கவனித்தார்.

### சரித்திரத்தில் 'புதிய' அத்தியாயம்.

லெனின்கிராட்டிலிருந்தும், மாஸ்கோவிலிருந்தும் பிரகாசிக்கின்ற சமதர்ம ஆட்சிமுறையின் விபரங்கள் யாவருமறிந்ததே. ஆனபோதிலும் முன்பு பார்த்ததற்கும், இப்போது பார்த்ததற்கும் வித்தியாசமில்லாமலில்லை அந்த வித்தியாசம் யாதெனில் ஐக்ய சோவியத் ஆட்சியின் கொடிய விரோதிகளும், அதன் யந்திரம், விவசாயம் கல்வி ஆகிய சகல துறைகளிலும், பெற்ற விநோதமான வெற்றியை ஒப்புக்கொண்டாக வேண்டியவர்களாயிருக்கிறார்களென்பதே. இந்த விதமான விநோத வெற்றிக்கு முக்கிய காரணம் பொதுவுடைமையை அடிப்படையாகக்கொண்ட சமதர்ம முறைதான். தோழர் சக்லத்வாலாவுக்கு ருஷியா மூன்றாந்தடவைப் பிரயாணமாயிருந்த போதிலும் ஒவ்வொரு தடவையும் அதன் சரித்திரத்தில் புதிய அத்தியாயமாகவே இருக்கிறதாம்.

### மாஸ்கோவின் அவா.

தோழர் சக்லத்வாலா கூறினதாவது.

"தற்போது மாஸ்கோ ருஷியாவிற்குமட்டுமல்ல உலகத்திற்கும் உபயோகமான ஓர் புதிய தத்துவத்தைச்செய்து காட்டிக் கொண்டிருக்கிறது. அபார சக்தி வாய்ந்த முதலாளி உலகம் அந்தகார இருளில் தவித்துக் கொண்டும், க்ஷீணித்துக் கொண்டும் வரும் இந்தக் காலத்தில்மாஸ்கோ ஓர் ஒப்பற்ற உலக சமாதான விளக்காகவும், அகில உலக தொழிலாளரின் சக்திக்கு ஓர் உருவாகாரமாகவும், சமதர்மத்தை அடிப்படையாகக்கொண்ட பொருளாதார அபிவிருத்தியின் வெற்றிக்கோட்டையாகவுமிருக்கின்றது. என்னுடைய 1923-ம் வருடத்திய ரஷியப்பிரயாணத்தில் கண்டதற்கும், இப்போதிருப்பதற்கும் பெருத்த வித்தியாசமிருக்கிறது. மாஸ்கோவை புதுப்பிக்கும் வேலை இன்னும் நடந்துகொண்டேயிருக்கிறது. இப்பெரிய நகரத்தின் ஜில்லாக்களில் யாங்கணும் புதிய சாலைகள் போடப்பட்டு வருகின்றன. கட்டிட வேலைகள் வெகு மும்மரமாக நடந்து வருகின்றன. என்ஜினீயர்கள் பிளான்கள் எழுதியது எழுதிய வண்ணமாகவே இருக்கின்றார்கள். சிற்பிகள் கட்டிடங்களைக் கட்டியவண்ணமே இருக்கின்றனர். இவற்றை எல்லாம் பார்க்கும்போது ஒரு புதிய உலகத்தை சிருட்டிப்பதாகத் தோன்றுகிறதே ஒழிய பழய எதையும் சீர்திருத்தம் செய்வதாகத் தோன்றவில்லை.

நான் மறுபடியும் 1947-ல் மாஸ்கோ சென்று பார்க்க வேண்டுமென பேரவாக்கொண்டிருக்கிறேன். மாஸ்கோ நகரமானது தான் ஐரோப்பாகண்டத்திலேயே மிகப்பிரமாண்டமான நகரமாகத் திகழவேண்டுவதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்து கொண்டு வருகிறது. நான் "பிரம்மாண்டமான" என்று சொன்னது விஸ்தீரணத்தில் அல்ல. லண்டன் நகரம் விஸ்தீரணத்தில் பெரிதாயிருக்கலாம். லண்டன் நகரத்தின் உயர்வு முன்பே க்ஷீணித்துப் போய்விட்டது. உயர்ந்ததாகக் கருதப்பட்டு வந்த பெர்லினும் ஹிட்லருடைய கொடுங் கோலாட்சியினின்றுதித்த அபகீர்த்தியால் பாதாளத்தில் வீழ்ந்தது. மாஸ்கோ நகரமானது ஐரோப்பா கண்டத்திற்கே தலைநகரமாக விளங்கா விட்டாலும்,மற்ற நகரங்கள் அதைப் பின்பற்றி நடந்துகொள்ளக் கூடிய ஒரு வழிகாட்டியாக எல்லோராலும் ஒப்புக் கொள்ளத்தக்க நிலையை அடையும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஒற்றுமை, வலிமை, முன்னேற்றம் ஆகியவைகளைக் கற்றுக்கொள்ளுவதற்கு எல்லா தேசத்து ஜனங்களும் (ஆண்களும், பெண்களும்) மாஸ்கோ நகருக்கே செல்ல வேண்டியதான ஒரு யாத்திரை ஸ்தலமாகவும் "அது சீக்கிரத்தில் விளங்கும். அதாவது மேற்சொன்ன, ஒற்றுமை, சாந்தம், முன்னேற்றம் ஆகியவைகளை உபதேசிக்கும் ஓர் உலக குருவாக மாஸ்கோ விளங்கும். சமுத்திர வாயிலாக மாஸ்கோவிற்குச் செல்ல லெனின்கிராட் துறைமுகம் ஓர் முகத்துவாரம் என்கிற முறையில் பெருமை அடையும். தொழிலபிவிருத்தியைப் பற்றிக் கூறவேண்டுமென்றாலோ அதில் அபாரமாக முன்னேறியிருக்கிறது. உதாரணமாக ஐவனோவா என்னுமிடத்தில் இருக்கும் நெசவாலைகளையும், கார்க்கோ என்னுமிடத்திலிருக்கும் மோட்டார் யந்திர சாலைகளையும், யாரோஸ்லாவ் என்னுமிடத்தில் நடக்கும் செயற்கை ரப்பர் தொழிலையும், என்ஜினீயரிங்கையும் பார்ப்பவர்களின் மனம் பிரமித்துவிடும்.

ஏனென்றால் "ரோமாபுரி ஒரு நாளில் கட்டப்பட்டதல்ல" என்ற பழமொழிப்படியும் "முன்னேற்றமற்ற நாடுகள் முன்னேற்றமடைய வேண்டுமானால் அவைகள் முதலாளித்துவத்தின் கட்டுப்பாட்டினின்று விடுதலை பெற, உறுதியும், தைரியமும் கொண்டு ஆன்றிருந்து ஒரு நூற்றாண்டு வரையாவது இடைவிடாது உழைத்தால்தான் முன்னேற்றத்தைக்காண முடியு"மென்று சொல்லப்படுகிற அனுபவ வாக்கியத்தின்படியும் பார்ப்போமானால் இச்சொற்ப வருடங்களுக்குள்ளாகவே அதிசயிக்கத்தக்கதானதொரு முன்னேற்றத்தை ரஷியாவில் காணமுடிந்தமையினாலேதான்.

தொழிற்சாலைகளில் சென்றுஅங்கு வேலை செய்யும் ஆண் பெண் தொழிலாளரின் திறமையையும், வல்லமையையும் கவனிக்கும் போதும், புத்தம் புதிய முறையாலமைக்கப்பட்ட புதிய ஆண் பெண் கூட்டுறவுகளைக் கவனிக்கும் போதும், நான் ஆச்சரியம் கொண்டுமெய்மறந்துநிற்க வேண்டியவனானேன். நம் போன்றவர்களுக்கு இவைகள் ஆச்சரியமாகவும், அற்புதமாகவும், கடினமாகவும் தோன்றிய போதிலும் ஒரு பொதுவுடைமைக்காரனுக்கு இவை மிக லேசாகவும், மிக்க சுலபமானதாகவுமிருக்கிறது.

முதலாளி ஆதிக்கத்தை அடக்கி ஒடுக்கி அதன் அடிப்படையானதும், மனித முற்போக்கிற்கு முட்டுக்கட்டையானதும், வன்னெஞ்சம் படைத்த ஒரு சில சுயநல சோம்பேரிக்கூட்டத்தாரை மட்டும் தின்று கொழுக்க வைப்பதுமான தனியுடைமையை விரட்டியடித்து எல்லோரும் (மனித வர்க்கம் முழுமையுமே) விடுதலை, சாந்தி அறிவு, ஆனந்தம் முதலியவைகளைப் பெறக்கூடிய ஓர் ஒப்பற்ற மார்க்கத்தை விஞ்ஞான உதவியால் மிக எளிதில் ஓர் பொதுவுடைமைக்காரன் செய்து விடுகிறான். எகாடரின்பர்க் என்று வழங்கபபட்ட ஸ்வர்ட்லாஸ்க் என்னுமிடத்தில் கடைசி ஸார்மன்னரின் ஆடம்பரவாழ்க்கை எப்படி இருந்ததெனஅறியலாம். (தொடரும்)

---

### சு. ம. பாவலர்.

சு-ம-பாவலர் முத்துராமலிங்கபுரம் தோழர் தி. அ. வேங்கடசாமியவர்கள் 9-9-34 தேதி முதல் ஈரோட்டில் தங்கி "பகுத்தறிவு" காரியாலயத்தில் அலுவல் பார்த்து வருகிறார்.

# சர். R. K. ஷண்முகமும், பார்ப்பன சூழ்ச்சியும்.

(ஸ்ரீவில்லிப்புத்தூர் S. K. முத்தசாமித் தேவர் எழுதுவது)

இந்தியாவை ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்து பிரித்து சுதந்திரம் பெற விரும்பி பாடுபட்டு வரும் சபை காங்கிரஸ் தான் என்பதாக காங்கிரஸ் பக்தர்கள் கூறுகிறார்கள். அப்படியே வைத்துக் கொள்வதானாலும் தற்கால நிலைமையில் சமூக சீர்திருத்த விஷயத்தில் காங்கிரஸ் பிற்போக்கடைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதிலும் சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையிலும், காங்கிரசானது பார்ப்பனர்களின் கையில் சிக்கிய ஓர் பொம்மையைப் போன்றிருப்பதல்லாமல், வகுப்புவாதத்தையும், வேற்றுமையையும் உண்டாக்கும் ஓர் சூழ்ச்சியாரின் கூட்டமாகவும் இருந்து வருகிறது.

வட இந்தியாவைப் பொறுத்த வரையிலும் ஹிந்து முகமதியர் பிணக்கு இருந்தாலும் ஹிந்துக்கள் என்ற வரையிலும் ஒற்றுமையாக இருந்து வருகிறார்கள். ஓர் பார்ப்பனரல்லாதவர் அரசியலிலோ, அல்லது இதர பொதுஜன ஊழியத்திலோ, உன்னத நிலைமைக்கு வர பிரயத்தனப் படுவாரானால் அவரைத் தலை தூக்கி விடுவதில் ஜாதிப் பாகுபாடுகளைக் காட்டாமல் ஹிந்து என்ற ஹோதாவில் ஒற்றுமையாக இருந்து வருகிறார்கள். நம் தமிழ் நாட்டைப்பொறுத்த வரையிலும், ஓர் பிராமணரல்லாதவர் தேசபக்தியிலோ, அரசாங்கத்தினிடத்தோ, அல்லது பொது விஷயங்களிலோ, ஓர் உயரிய பதவியைப்பெற விரும்பி தியாகம் புரிந்து முன்னேறி வருவாரானால் அவர் எவ்வளவு பெரிய தியாகியாக இருந்தாலும் அவரைப் பழித்துக்கூறி அவரிடத்து பொது ஜனங்களுக்கு வெறுப்பை உண்டாக்க எவ்வளவு சூழ்ச்சி செய்ய வேண்டுமோ அவ்வளவையும் செய்து வைப்பதில் பார்ப்பனர்கள் கண்ணுங்கருத்துமாய் இருந்து வந்திருக்கிறார்கள் என்பதை அவர்களுடன் நெடுநாள் பழகியவர்களே உணர்ந்து கொள்ள முடியுமல்லாது ஒருசில நாட்கள் மட்டிலும் பார்ப்பனர்களுடன் பழகிய ஒருவர் பார்ப்பாரின் தந்திரங்களை உணர்ந்து கொள்வதென்பது முடியாத காரியமாகும். பால கங்காதர திலகருக்கு உறுதுணையாக இருந்து சுதந்திர உணர்ச்சியை நிலைநாட்டித் தென்னாட்டில் என்றும் மறக்கமுடியாத நிலைமையில் அரும் பெரும் தியாகங்களைச் செய்த தூத்துக்குடி வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்களை விட சிறந்த தேச பக்தர் ஒருவரை தமிழ் நாட்டில் காட்ட முடியுமா? அவர் இப்போது இருக்குமிடம் தெரியாமல், ஒதுங்கியிருப்பதற்குக் காரணம் பார்ப்பனர்களின் குள்ளநரித்தந்திரம் என்பதை மறுக்க முன்வர எவர் மனம்துணியும்? தமிழ் நாட்டில் தேச பக்தியை வளர்த்து சிறைக்கொடுமைகளையும் சகித்து கர்ஜனை புரிந்த டாக்டர் வரதராஜுலு அவர்களும் காந்தியடிகளின் பக்தரும், தொழிலாளரின் தோழருமாயிருந்து நவசக்தியை தேசத்துக்களித்து அருந்தொண்டாற்றிய தோழர் கலியாணசுந்தரம் அவர்களும், வைக்கம் வீரராகிய தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களும், காங்கிரசிலிருந்து விலகியதற்கு காரணம் யாது என்பதை தமிழ் மக்கள் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தோழர்கள் வ. உ. சிதம்பரம் பிள்ளை, வரதராஜுலு, ஈ. வெ. ராமசாமி ஆகிய இவர்களைப்போன்ற தலைவர்களை, காங்கிரசிலிருந்து விலகும்படியான சூழ்ச்சியைப் பார்ப்பன வேடதாரிகள் செய்யாதிருந்தால் இன்று தோழர் ராஜகோபாலாச்சாரியும், சத்தியமூர்த்தியும் தமிழ் நாட்டிலும் வெளி நாடுகளிலும் தலைநிமிர்ந்து மாபெருந்தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ள முடியுமா என்பதை தேச பக்தர் என்று கூறும் ஒருவர் மார்பில் கைபோட்டுச் சொல்ல முடியுமா என்று நான் கேட்கிறேன். பார்ப்பனர்களின் தந்திரச் செய்கையில் சிக்கித் தவிக்கும் பார்ப்பனரல்லாத சகோதரர்கள் உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டி பார்ப்பனர்களால் செய்யப்பட்டு வரும் யோக்கியமற்ற செய்கைகளைப்பற்றி நாம் எடுத்துக் கூறுவது அவசியமாகும்.

தமிழ் நாட்டிலுள்ள பத்திரிகைகளில் பெரும்பாலும் பார்ப்பனப் பத்திரிகைகளேயாகும். அவைகள் காங்கிரசின் போர்வையைப் போர்த்திக் கொண்டு பார்ப்பனரல்லாதவரின் முன்னேற்றத்தைத் தடுக்கவும், பார்ப்பனர்களை முன்னேறச் செய்யவும் எதைப் பிரசுரிக்க வேண்டுமோ, அதைச் செய்து வருவதுடன் போட்டா போட்டியையும், ஜாதி மத பேதத்தையும் கிளப்பிக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட பத்திரிகைகளின் பொறுப்பற்ற நிலைமையை நாம் கண்டியாதிருந்தால் நாட்டின் விடுதலைக்கே நாசகாலம் தான் என்பதை நாம் எடுத்துக் கூறத் தேவையில்லை. 12-8 34ல் வெளிவந்த விகடனில் சர். ஷண்முகம் அவர்களைப்பற்றி அவதூறாகவும், அலட்சியமாகவும், கன்னாபின்னா வென்றும் கத்தியிருப்பதிலிருந்து இவர்களின் அயோக்கியத்தனம் எவ்வளவு என்பதையும் பொது மக்கள் தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

“தங்களுடைய தேசபக்தி, தியாகம் முதலிய குணங்களின் மூலம் வரும் பெரிய மனிதர் ஓர் வகுப்பினர் என்றும், இதற்கு மாறாக சமயோசிதசூழ்ச்சி சாமர்த்தியத்தினால் வரும் பெரிய மனிதர்கள் மற்றொரு வகையினர் என்றும் ஆக இரண்டு விதத்தில் பெரிய மனிதராகலாம் என்று முடிவு கட்டிய விகடனின் நியாயத்தைக்கொண்டு ஆராய்வோமானால் டாக்டர் வரதராஜுலு அவர்கள் தேச பக்தி, தியாகம், வீரம் முதலிய உயர்ந்த குணங்களுடன் கூடிய, ஓர் உண்மைப்பெரியவர் என்பதை காந்தி யடிகளும் ஒப்புக்கொண்டு தான் தீரவேண்டும். அப்படிப்பட்ட ஓர் பெரியவர் இந்தியா சட்டசபைக்கு ஓர் அபேட்சகராக நிற்கும்போது, அவரை அன்புடன் வரவேற்று உபசரிக்க வேண்டியது ஓர் இந்தியனின் முதற் கடமையாக இருக்க அதை விடுத்து ஆச்சாரியும், சத்தியமூர்த்தியும் டாக்டர்வரதராஜுலுவுக்குபோட்டியாகஇன்னொருவரை நிறுத்தியது எதற்காக? பார்ப்பனரல்லாத சுதந்திர புத்தி உள்ள ஒருவர் ஓர் பெரிய மனிதராவதா என்னும் வயிற்றெரிச்சலினாலன்றோ என்பதைப் பிராமணரல்லாத மக்கள் விகடனின் “நியாயத் தீர்ப்பின்” மூலம் அறிந்துகொள்ளலாம். மேலும் ஸர். ஷண்முகம் அவர்கள் தியாகத்தினாலான பெரிய மனிதரல்லர் என்றும், சமயோசித சாமர்த்திய சூழ்ச்சியினாலானபெரிய மனிதர் என்றும், ஸர் ஷண்முகம் அவர்களை ஓர் பெரிய மனிதராக கருதக் கூடாது என்று முடிவு கட்டிய விகடனாசிரியரின் குறும்புத்தனத்தைக் கண்டு தலையிலடித்து ஒவ்வொருவரும் கண்டியாதிருந்தால் நம் தமிழ் நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களுக்கே ஓர் மானக்கேடாகுமல்லவா? விகடனாசிரியனுக்கும் விகடனின் இனத்தாருக்கும், ஸர். ஷண்முகம் அவர்கள் பார்ப்பனரல்லாதவரில் இவ்வளவு இளவயதில் அறிவு ஆற்றல்களில் முதிர்ந்து உன்னத நிலைமைக்கு வந்து விட்டதைக் கண்டு, பொறுக்க முடியாத துக்கம் ஏற்பட்டுவிட்டது போலும். இதை முன்னிட்டே, எந்த வழியிலாவது ஒரு சூழ்ச்சியைத்தேடி ஸர் ஷண்முகம் அவர்களின் தியாகத் தன்மையைப் பாராட்டாது சிறிய குற்றங்களை எடுத்துக் கூறி வீண் புரட்சி பண்ணுவதும் இதை ஆதரித்து சில பார்ப்பனரல்லாத காங்கிரஸ் சக்கைகள் தாவித் தாவிக் குதித்து உறுமுவதையும் கண்டு ஏமாந்து போகாமலிருக்கவேண்டி, ஸர். ஷண்முகம் அவர்கள் வாழ்க்கையில் நடத்திக்காட்டிய பெரிய தியாக நிலைமையைப்பற்றி, நாம் எடுத்துக்காட்டுவதிலிருந்தாவது பார்ப்பனர்களின் சூழ்ச்சி வலையில் சிக்கி அவர்களுக்குத் தாளம் போட்டு வரும் பக்தர்கள் உண்மையை, உணர்ந்து நடப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஸர் ஷண்முகம் அவர்கள் எந்த விஷயத்தில் மற்ற பார்ப்பனப்பதர்களைவிடத் தாழ்ந்தவர் என்பது நமக்குத் தெரியவில்லை. ஸர் ஷண்முகம் அவர்களின் பிரசங்கங்களை இந்திய சட்டசபையில் கவனித்தவர்களுக்கு அவரது அறிவின் மேன்மையும் அவருடைய திறமையும் எவருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை வெளியிடுவதில் அவருடைய தீரத்தைப்பற்றியும் நாம் கூறவேண்டியது அவசியமில்லை. பாஞ்சால சிங்கம் லாலாலஜபதிராய், மோதிலால் நேரு எஸ் ஸ்ரீனிவாச ஐயங்கார், பண்டித மாளவியா, ரெங்கசாமி அய்யங்கார் போன்றவர்கள் இந்தியா சட்டசபையில் அங்கத்தினராக இருந்தபோதேகட்சித்தலைவராக, சுயராஜ்யக் கட்சிக்குக் கொரடாவாக ஸர் ஷண்முகம் அவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டதால், ஸர். ஷண்முகம் அவர்கள் ஓர் உன்னத பதவியைப்பெறக்கூடிய யோக்யதை உடைய பெரியார் என்பதை நாம் கூறாமலே தெரிந்துகொள்ளலாம். அச்சமயம் ஆஸ்திரேலியாவில் நடந்த ஏகாதிபத்திய மகாநாட்டுக்கு இந்தியா சட்டசபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக லஜபதிராய் தம் உடம்பின் அசௌகரியத்தால் போக முடியாமல் போகவே ஸர் ஷண்முகம் அவர்கள் இந்தியாவின் பிரதிநிதியாக ஆஸ்திரேலியா சென்று. அவ்விடம் செய்த உபந்யாசங்களில் இந்தியாவின் குறைபாடுகளை எவ்வளவு ஆணித்தரமாக எடுத்துரைத்திருக்கிறார் என்பதையும் அச் சமயம் பத்திரிகை படித்தோர் அறிந்திருக்கலாம். அதே சமயம் விகடனின் இனத்தாராகிய தோழர் ரெங்காச்சாரி ஆஸ்திரேலியா சென்று பிரிட்டிசாரை எவ்வளவோ புகழ்ந்து அரசன் விஷ்ணு அவதாரமென்றெல்லாம் பேசியிருக்கிறார் என்பதையும் கவனிக்கவேண்டியதவசியமாகும் லஜபதிராய், மோதிலால் நேரு முதலியவர்கள் தன்னுடன் சட்டசபையில் அங்கத்தினராயிருக்கும்பொழுதே ஸர் ஷண்முகம் அவர்கள் எவ்வளவோ கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்தவர்கட்கு அதிகம் கூறவேண்டியதில்லை. இந்தியாசட்டசபைத் தலைவர் பதவியை ஸர் ஷண்முகம் அவர்கள் ஒப்புக்கொண்ட காலத்தில் தேசிய கட்சி கொரடாவாகிய ஸர். ஹரிசிங்கவர் தலைவரானதற்குப்பாராட்டி

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க

# Decameron by Boccaccio

# "டெக்கமரான்"

## அல்லது

# விகடக்கதைகள்.

(மொழிபெயர்ப்பாளர் தோழர் உடுமலை கனகராஜன்)

3.

தோழர்களே! நான் இக் கதையின் மொழிபெயர்ப்பை எழுதுவதற்கு முன் சில வார்த்தைகள் உங்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். இக்கதை கன்னிகா ஸ்திரீகளைப் பற்றியதாகையால் சில பாகங்கள் கொஞ்சம் அருவருப்பானதாயிருந்தாலும் ஆங்கில நூலில் இருப்பதை மொழி பெயர்ப்பில் நீக்க முடியாதபடி இருப்பதால் கூடுமானவரை அதன் வேகத்தைத்தணித்து எழுதியிருக்கிறேன்- நான் கீழே எழுதும்கதை மொழிபெயர்ப்பு என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப் புத்தகம் பி. எ. வகுப்பு மாணவர்கள் படிக்க வேண்டிய இதர புத்தகங்களில் ஒன்று என்பதையும் நினைப்பூட்டுகிறேன்.

முற்காலத்தில் இடாலியா தேசத்தில் புனிதமானதென்று பெயர் பெற்ற கன்னிகா ஸ்திரீகள் மடம் ஒன்று இருந்தது. அதில் எட்டுக் கன்னிகைகளும், ஒரு தலைவியும் இருந்தனர். அம் மடத்திற்குச் சேர்ந்த தோட்டம்ஒன்று இருந்தது. அத் தோட்டக்காரன் சம்பளம் போதாதென்று அதை விட்டு விலகி அவன் ஊரை அடைந்தான். அவன் ஊரா ரெல்லோரும் அவனை யணுகி "அங்கு என்ன செய்துகொண்டுஇருந்தாய்" என்று கேட்டனர். அவன் தோட்டத்தைப் பயிர் செய்வதும், விறகு வெட்டுவதும்தான் தன் தொழிலென்றும், தனக்குச்சம்பளம் போதாததோடு, சைத்தான்களை யொத்த அவர்கள் தன்னைக் கொடூரமாக நடத்தியதால், தான் வந்துவிட்டதாகவும் சொன்னான்.

அவனை விசாரிக்க வந்தவர்களில் மெசட்டோ (Masetto) என்பவன் ஒருவன். அவன் இவற்றை விபரமாகத் தெரிந்துகொண்டு அவ் வேலைக்குத் தான் போகத் தீர்மானித்தான். இவன் நல்ல தேகக் கட்டும், அழகும் பொருந்தியவாலிபனாயிருந்தமையால், தன்னை அவ்விடத்தில் வேலைக்குச் சேர்த்துக் கொள்வார்களோ என்று சந்தேகங்கொண்டு ஒரு ஊமையனைப்போல் செல்வதெனத் தீர்மானித்தான்.

அப்படியே அவன் கோடாலியும், மண்வெட்டியும் தோளில் தாங்கி அம் மடத்திற்குச் சென்று அங்கிருந்தகாரியஸ்தனிடம் தனக்குச் சாப்பாடு வேண்டுமென்றும், வேலை செய்வதாகவும் சைகைகளால் தெரிவித்துக்கொண்டான். அக் காரியஸ்தனும் மெசட்டோவுக்கு உணவளித்து அங்கே கிடந்த கட்டைகளை வெட்டச்சொன்னான். இவன் வேலையில், திருப்தி அடைந்த காரியஸ்தன் சிலநாள் அவனை அங்கேயே இருக்கும்படி சொன்னான். ஒரு நாள் அம் மடத்தின் தலைவி இவனைக் கண்டு இவன் யாரென்று காரியஸ்தனிடம் கேட்டாள், "இவன் ஒரு ஊமையன். வேலை வேண்டுமென்று இங்கே வந்தான். எல்லா வேலைகளும் நன்றாகச் செய்கிறான். இவனுக்குத் தோட்ட வேலையும் தெரிந்திருந்தால் இவனை இங்கேயே அமர்த்திக் கொள்ளலாம், எல்லா வேலைகளுக்கும் இவனை உபயோகப்படுத்திக்கொள்ளலாம். தவிர கன்னிகா ஸ்திரீகளிடத்தில் வார்த்தையாடுவோன் என்ற பயமும் இல்லை", என்று உரைத்தான். மடத் தலைவியும் அவன் சொன்னதை ஆமோதித்து அவனுக்குத் தோட்ட வேலை தெரிந்திருந்தால் அவனை மடத்திலேயே அமர்த்திக்கொள்ளலாமென்று சொன்னாள். இதை யருகில் வேலை செய்துகொண்டே கேட்டுக் கொண்டிருந்த மெசட்டோ, "நற்குணம் வாய்ந்த பெண்களே என்னை இங்கே வைத்துக்கொண்டீர்களானால் உங்கள் தோட்டத்தை நான் முன்னிருந்த தோட்டக்காரனை விட நன்றாக உழுதுபயிரிடுவேன்", என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான். காரியஸ்தனும் இவனிடம் சில தோட்டவேலைகளைச் செய்யச் சொல்லி அவைகளை இவன் செவ்வனே செய்ததின் பேரில் இவனை கன்னிகா ஸ்திரீ மடத்தில் தோட்ட வேலைக்குச்சேர்த்துவிட்டான்.

இம்மாதிரி ஒரு ஊமையன் அங்கு சேர்ந்திருந்தது சீக்கிரம் எல்லாக் கன்னிகா ஸ்திரீகளுக்கும் தெரிந்து விட்டது. காலம் செல்லச் செல்ல கன்னிகாஸ்திரீகள் இவனை யணுகி இவனை உண்மையான ஊமையனென்று நினைத்து தமாஷாய் பேசிக்கொண்டிருந்தார்கள். தலைவியானவள் இவனுக்கு வாய் ஊமையாய் இருப்பது போல் ஆண்களுக்குரிய ஆண்மையுமில்லாமலிருக்குமென யோசிக்கலானாள். இவனும் கிரமமாக தோட்ட வேலையைச் செய்து வந்ததோடு தன்னை ஒரு முழு முட்டாள் என்று பிறர் நினைக்கும்படியாகவும் நடந்து கொண்டான்.

இப்படியிருந்து கொண்டு வருகையில் ஒரு நாள் இவன் வேலை செய்தபின் கொஞ்சம் இளைப்பாற ஒரு புல் தரையில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டு இருந்தான், அச்சமயம் இரு இளங்கன்னி காஸ்திரீகள் அவ்வழியாக வந்தனர். அங்கு நின்று அவனைப்பார்த்தார்கள். இதை இவன் அறிந்தும் அறியாதவன் மாதிரி தூங்குவது போல் பாசாங்கு செய்தான். ஒரு பெண் இவனையே உற்று நோக்கிய பிறகு, மற்றவளைப்பார்த்து, "என் மனதில் ஒன்று பட்டது. அதை உன்னை நம்பி உன்னிடம் தெரிவிக்கின்றேன் அது உனக்கும் பொருத்தமாயிருக்குமென்று நினைக்கிறேன்" என்றாள். அதற்கு மற்றவள், தாராளமாய்ச்சொல். உன் ரகசியத்தை நான் வெளியே சொல்ல மாட்டேன், என்றனள். முதலில் பேசியவள் தங்கள் மடத்தில் எவ்வளவு கடுமையான கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டியிருக்கின்றதென்றும், மடத்திற்கு வெளியிலிருந்து வரும் பெண்கள், உலகத்திலுள்ள இன்பங்களெல்லாவற்றிலும் சிறந்தது ஆண்கள் மூலமாக அடைவது தான் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் இம்மடத்தில் ஒரு கிழவனையும், ஒரு ஊமையனையும் தவிர வேறுஆண்களை இல்லாதிருப்பது வருந்தத்தக்கதென்றும், இம்மாதிரியான எண்ணங்கள் மற்றவர்களுக்கும் உதித்திருக்கலாமென்றும் பேசினாள். பின்னும் அப்பெண்கள் சொன்ன உண்மையை இவ்வூமையின் உதவியைக்கொண்டு பரிசோதிக்கலாமென்று தான் நினைப்பதாகவும், ஒரு சமயம் அவன் இணங்காத பட்சத்தில் அவன் வெளியிடமுடியாதபடி ஊமையாய் இருப்பதால் அவனைத் தவிர வேறு பொருத்தமான ஆள் கிடைப்பது அரிது என்றும் மொழிந்தாள். இதைக்கேட்ட மற்றவள் தாங்கள் மேற்கொண்ட உறுதி மொழிக்குப் பங்கமேற்படுமே என்று யோசிக்க, அதற்கு அவள், அவர்களுக்குள் அனுதினம் எத்தனையோ உறுதி மொழிகள் சொல்லப்படுகின்றனவென்றும், ஆனால் அதன் படி நடப்பதில்லையென்பதும் அவளுக்கே தெரிந்த விஷயமென்றும் எடுத்துக் காட்டிஅவளையும் தன் அபிப்பிராயத்திற்கு இணங்கும்படி செய்தாள். அப்பொழுது மற்ற கன்னிகைகள் இளைப்பாறும் நேரமாதலால் அதுவே தகுந்தசமயமென்றும், அருகே இருந்த குடிசையே தகுந்த இடமென்றும் பேசிமுடித்தனர். மெசட்டோவும் இவைகளைக் கேட்டுக்கொண்டே இருந்தான். பிறர் தங்களைக் கவனிக்கவில்லையென்பதை உறுதி செய்து கொண்டு முதலவள் அவனைத்தட்டியெழுப்பி, புன்சிரிப்புடன் நோக்கினாள். இவனும் அவளைப்பார்த்து ஒன்றும் அறியாதவன் போல் விழித்தான். பின்பு அவனை அவள் அக்குடிசைக்கு அழைத்துச் சென்று தன் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொண்டு, அதுவரை வெளியில் காவலிருந்த மற்றவளுக்கும் சந்தர்ப்பம் அளித்தாள். இது அவர்களுக்கு புதுமையாக மிதமிஞ்சின இன்பத்தை யூட்டியதால் மறுமுறையும் அனுபவித்த பின் மடம் வந்து சேர்ந்தார்கள். இம்மாதிரியே சிலகாலம் இவ்விருவரும் அவனுடன் அடிக்கடி இன்பம் நுகர்ந்து வந்தனர்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் ஜன்னலின் வழியாக இவர்களது நடத்தையைப் பார்த்துவிட்ட ஒரு கன்னிகாஸ்திரீ மற்றுமிருவரையழைத்து வந்து, அவர்களுக்கும் காண்பித்தாள். முதலில் அவர்கள் இச்சம்பவத்தைத் தலைவிக்குத் தெரிவிப்பதே அவர்கள் கடமையென எண்ணினார்களானாலும் கலந்து ஆலோசிப்பதே நன்றென நினைத்து, அவ்வாறு செய்த பிறகு மெசட்டோவை அவ்வைவருக்கும் பொதுவாக்கிக் கொண்டனர். கொஞ்ச நாட்களுக்குள் மிகுதியிருந்த மூவரும் மெசட்டோ விளையாட்டில் கலந்து கொண்டனர்.

மெசட்டோவுக்கு இரவில் தூங்க முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டபடியால் ஒரு நாள் மத்தியானம் ஒரு பாதாமி மரத்தினடியில் அயர்ந்து தூங்கிவிட்டான். அச்சமயம் வெய்யில் அதிகமாக இருந்தபடியாலும், காற்று வீசிக்கொண்டிருந்த படியாலும் அவனுடைய ஆடை பலவாறாக விலகியிருந்தது. அந்நிலையில் அம் மடத்தலைவியும் அவ்வழியே வந்தாள். இக்காட்சி அவள் மனவுறுதியை ஒரு நொடியில் தளர்ச்சியுறச் செய்து மற்ற கன்னிகைகளைப்போலவே இவளையும் இச்சிக்கும்படி செய்து விட்டது. பிறகு அவள் அவனை யெழுப்பி தன் அறைக்கு அழைத்துச்சென்று அவனை அங்கேயே பலநாள் வைத்துக் கொண்டனள். மற்ற கன்னிகைகள் தங்களது தோட்டக்காரனைக் காணாமல் ஏக்கங்கொண்டார்கள். மெசட்டோ நாளடைவில் இவன் பிரவேசித்தகாரியம் இவன் சக்திக்கு மீறிவிட்டதென்பதையுணர்ந்து, ஓர்இரவு தான் ஊமைபோல் பாசாங்கு செய்து வந்ததை விட்டு பின் வருமாறு பேச ஆரம்பித்தான். "அம்மா! ஒரு சேவல் ஒன்பது கோழிகளைத்திருப்தி செய்யலாம்; ஆனால் ஒரு மனிதன் ஒன்பது பெண்களைத் திருப்தி செய்வதென்பது முடியாத காரியமென்று தெரிந்து கொண்டேன். ஆகவே வேறு விதமாகத் திருத்திஅமைத்துக் கொண்டாலொழிய என்னால் சமாளிக்க முடியாது, நான் விலகிக் கொள்ள வேண்டியதுதான்" என்றான். மடத் தலைவி அவ்வூமை

தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க.

# காங்கிரசின் வீரம்.

## வெட்கம்! வெட்கம்!! வெட்கம்!!!

காங்கிரசுக்காரர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் ஒரு கூட்டம் சிற்சில ஊர்களில் இருந்துகொண்டு காலித்தனம் செய்து வருவதைப்பற்றி இதற்கு முன் பல தடவை "குடி அரசு" "புரட்சி"ப் பத்திரிக்கைகளில்எழுதப்பட்டிருந்தது வாசகர்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறோம்.

இந்தக் கூட்டங்களுக்கு ஏற்பட்ட வேலையெல்லாம் காங்கிரஸ் பேரால் வயிறு வளர்ப்பதும், அதற்குக் கூலியாகக் காங்கிரஸ்காரர் களல்லாதார் என்பவர்கள் போடும் கூட்டங்களில் போய் காலித்தனம் செய்வதும், சரிசமமான காலித்தனத்தையோ, போலீசாரையோ கண்டால் ஓட்டமெடுப்பதும் வழக்கமாயிருந்து வருகிறது.

தேசியப் பத்திரிக்கை என்று சொல்லிக்கொள்ளும் சில அதாவது காலித்தனத்தில் பிரியமும், ஆசையும் உள்ள சில பத்திரிக்கைகள் "போலீசார் பந்தோபஸ்தில் கூட்டம் நடந்தது" என்றும், "கூட்டத்தில் கலவரம், குழப்பம்" என்றும் எழுதி அவற்றை ஆதரிப்பதுமாய் இருந்து வருவதும், காங்கிரசுக்கும், தேசியத்துக்கும் வெட்கக்கேடு என்பதுடன் தங்களுடைய யோக்கியதையானது வெளியாகக்கூடாத அவ்வளவு இழிவானது என்று அவர்களே கருதி காலித்தனத்தின் மூலம் எதிரிகளின் கூட்டத்தைக்கலைக்க நினைக்கிறார்கள் என்றும் கருதக் கூடியதாகவே இருக்கிறது.

தோழர் வரதராஜுலு நாயுடு வேலூரில் ஒரு கூட்டத்தில் பேசும்போது அக்கூட்டத்தில் அக்கூட்ட நடவடிக்கைக்குச் சம்மந்தமில்லாத கூச்சல்களை சிலர் கிளப்பினார்களாம். அதாவது காந்திக்கு ஜே, அவனாசிலிங்கம் செட்டியாருக்கு ஜே என்று கூப்பாடு போட்டார்களாம் போலீசார் வந்த பிறகு ஓட்டம் பிடித்தார்களாம். [இந்த விஷயம் "இந்தியா" "தமிழ் நாடு" "சமதர்மம்" முதலிய பத்திரிக்கைகளில் காணப்படுகின்றது.)

பிறகு தோழர் வரதராஜுலு அவர்கள் சொல்லவேண்டியது முழுவதையும் சொல்லிமுடித்த பின்பேகூட்டம் முடிந்ததாம். இம்மாதிரி காலித்தனமும், இதைவிட மோசமான காலித்தனமும் வேலூரில் இதற்கு முன் இரண்டொரு தடவையும் நடந்திருக்கிறது. இதன் பயனாய் ஏற்பட்ட பலன் என்ன? அதாவது வேலூருக்கு போகின்றவர்கள் அங்குள்ள சில காலிகளுக்குப் புத்தி கற்பிக்கத்தக்க அளவு அதிகமான காலித்தனத்துடன் செல்ல வேண்டும். அல்லது போலீசுக்காரர்களை அவர்கள் கடமையைச் செய்ய எதிர் பார்க்கவேண்டும் என்ற பலன் தானே ஏற்படுகின்றது. காலித்தனங்களின் பயனாய் கூடிய சீக்கிரத்தில் பேச்சு சுதந்திரம் கூட நிறுத்தப்பட வேண்டியதாய் ஏற்பட்டுவிடும் என்றே பயப்படுகின்றோம்.

வேறு சில அரசாங்கங்களில் பொதுக்கூட்டங்கள் போட வேண்டுமானால் 24 மணி நேரத்துக்கு முன்பாகவே அதிகாரிகளுக்கு எழுதி உத்திரவும், பந்தோபஸ்துக்கு உதவியும் பெற வேண்டும் என்கின்ற ஒரு முறை இருந்து வருகின்றது. ஆனால் நமது பிரிட்டிஷ் அரசாங்கத்தில் அந்த தொல்லை இல்லை. இனிமேல் அது போலவேதான் இங்கும் ஏற்பட வேண்டி வரும் என்றே நினைக்கிறோம்.

காங்கிரசு ஏற்பட்ட பிறகு அனேக சுதந்தரங்கள் பறிக்கப்பட்டுப் போய்விட்டன. அதற்கு காங்கிரசின் இப்படிப்பட்ட நடத்தையே ஒரு அளவுக்கு ஜவாப்தாரி என்று தயங்காமல் கூறுவோம்.

கூப்பாடு போட்டவர்கள்-கலகமும், காலித்தனமும் செய்தவர்கள் அவை அவசியமென்றும், தங்களின் யோக்கியதையான கடமையென்றும் கருதி இருப்பார்களே ஆனால் போலீசார் வந்தபிறகும் "காந்திக்குஜே" சொல்லிக்கொண்டு அங்குநின்று இருக்கவேண்டும். அப்பொழுது தான் அவர்கள் உண்மையானவீரர்கள் ஆவார்கள். அப்படிக்கில்லாமல்சிகப்புத்தல்லாயைக்கண்டவுடன் ஓட்டமெடுக்குங்காங்கிரசுஎவ்வளவு வீரமும் மானமும் உடையது என்பதை நாம் விளக்கவேண்டியதில்லை.

இதைப் பற்றி சில பத்திரிக்கைகள் பெருக்கி எழுதி மகிழ்கின்றன. இப் பத்திரிக்கைகளுக்கு பொறுப்போ, "தேசிய" மானமோ இருக்குமானால் கண்டிப்பாய் இவ்வித நடவடிக்கைகளுக்கு வெட்கப்பட்டு அப்படிப்பட்ட காலிகளுக்கும் புத்தி சொல்லி அவர்களை நல்ல வழிப்படுத்த முயற்சித்து இருக்க வேண்டும் அப்படிக்கில்லாமல் இவர்களை உசுப்படுத்துகிற மாதிரி எழுதுவதால் குட்டி குலைத்து நாய்க்கு ஆபத்து ஏற்பட்டது என்பது போல் இப்படிப்பட்ட பத்திரிக்கைக்காரர்களுடையவும், காலிகளுடையவும் செய்கைகளால் "போலீஸ் நிர்வாகம் இந்தியர்கள் கையில் கொடுப்பதற்கு இந்தியாவுக்கு யோக்கியதை இல்லை. வெள்ளைக்காரனிடம் தான் இருக்க வேண்டும்" என்று சொல்லும் படியாய் ஏற்பட்டு வருகின்றது. இப்படிப்பட்ட ஆட்களையும், பத்திரிகைக்காரர்களையும்தன்னைப்பின் பற்றுகின்றவர்களாய்க் கொண்ட தோழர் காந்தி "இந்தியாவுக்கு சுயராஜ்ஜியம் வந்தால் பட்டாளம், ராணுவம் இல்லாமல் ராஜ்ஜியபாரம் நடைபெறும்" என்று சொன்னார் என்றால் இதில் சிறிதாவது உண்மையோ, அறிவுடைமையோ இருந்திருக்க முடியுமா என்றும் இவர்கள் உண்மையில் நாணயத்தில் அஹிம்சை வாதிகள் என்று சொல்லிக் கொள்ளத் தகுந்தவர்களா என்றும் கேட்கின்றோம்.

சுயமரியாதைக்காரர்களால்இப்படிப்பட்ட காலித்தனம் எங்காவது நடந்ததாகத்தெரியவந்த சமயத்தில்நாம் வெட்கப்பட்டும்,கண்டித்தும் இருக்கிறோமே ஒழிய எதிரி போலீசு பந்தோபஸ்தில் இருந்து பேசவேண்டியிருந்ததற்குவெட்கப்படாமலோ அதைப்பற்றி பெருமையாய் பேசிக் கொண்டோ இருந்ததில்லை.

கேள்விகள் கேட்டால் கேள்விகளுக்குப்பதில் சொல்லவேண்டியதுதான். இஷ்டமில்லையானால் இப்போது சொல்ல சௌகரியமில்லை என்று சொன்னால் கேள்வி கேட்பவர்கள் திருப்தி அடைய வேண்டியது தான். அல்லது சொன்ன பதிலை வைத்துக்கொண்டு தான் வேறு ஒரு கூட்டம் கூட்டி அதில் உள்ள தவறுதல்களைவெளிப்படுத்த வேண்டியதுதான். அப்படிக்கெல்லாம் இல்லாமல் கலகம், காலித்தனம் செய்வதும் பிறர்பேசுவது காது கேட்காமல் இருப்பதற்காக "காந்திக்குஜே" என்பது போல் கூவுவதுமான இழிவான செயல்களை ஒழிக்க வேண்டியதுதான் என்பதை பல முறை வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

இது எழுதினது காங்கிரசுக்காரருக்குமட்டும் என்று நாம் எழுதவில்லை. சுயமரியாதைக்காரர் என்பவர்கள் எங்காவது இப்படிப்பட்டகாலித்தனம் செய்திருந்த போதிலும் அவர்களுக்கும் சேர்த்துத்தான் எழுதுகின்றோம். 40000, 50000 பேர் உள்ள கூட்டங்களில் அவ்வளவு பேருக்கும் மாறுதலான-எவ்வளவோ எதிரிடையான அபிப்பிராயங்களைப்பற்றிப் பேசினபோதிலும் ஜனங்கள் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்து பிறகு தங்களுக்கு இஷ்டமான கேள்விகளை அதுவும் பேசிய விஷயத்தைப் பொருத்த கேள்விகளையே கேட்பதும் உபன்யாசகர் பதில் உரைப்பதும், உரைத்த பதிலை மரியாதையுடன் கேட்பதுமான காரியங்களை மேல்நாடுகளில் பார்த்திருக்கிறோம்.

அப்படிக்கெல்லாம் இல்லாமல் இம்மாதிரி கோழைத்தனமாக காலித்தனம் செய்வதைக் காங்கிரஸ்—தேசிய பக்தர்கள் பெரிதும் தங்களுக்கு உரிமையாக்கிக் கொண்டிருப்பதும் அதை காங்கிரசு—தேசிய பத்திரிகைகள் ஆதரிப்பதும் வெட்கம்! வெட்கம்!! வெட்கம்!!! என்று மும்முறை கூறி இனியாவது புத்தி வரட்டும் என்று ஆசைப்படுகிறோம்.

## பார்ப்பன விவாக விடுதலை.

பத்மலால்பதி என்பவர் சகுந்தலா என்னும் 12 வயதுள்ள பெண்ணைக்கலியாணம் செய்து கொண்டார். அவர் மனைவியை செம்மையாய் நடத்தாததால் பஞ்சாயத்துப் பேசி கணவனுக்கும்,மனைவிக்கும்எப்படிப்பட்ட சொந்தமும் கிடையாதென்று பஞ்சாயத்தார் தீர்மானம் செய்தார்கள் அதன் பேரில் சகுந்தலா தேவியை அவளுடைய பெற்றோர்கள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவித்து படிக்கும்படி செய்தார்கள் அந்தப் பெண் 10-வது வகுப்பில் படித்து வருகிறாள் அவளுக்கு வயது 18. சகுந்தலா தேவியை தன்னுடன் வாழ்க்கை நடத்த அனுப்பும்படி கட்டாக்நீதி ஸ்தலத்தில் வியாஜ்யம் தொடுத்தார். கோர்ட்டார் வியாஜ்யத்தை ரத்து செய்யப்பட்டதென்றும், அவள் மறு விவாகம் செய்து கொள்ளலாமென்றும், அவளுக்கும், புருஷனுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்றும் தீர்ப்பு செய்தனர்.

(ச. த.)

# சோஷியலிசம்.

## அதன் வரலாறு.

[சோஷியலிஸ்ட்]

சோஷியலிசத்தின் அம்சங்கள் (Elements) ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு காலத்திலும் இருந்து கொண்டே வந்திருக்கின்றன. மனிதன் நாகரீகமென்று சொல்லப்படும் இன்றைய அநாகரீக நிலைமையை அடைவதற்கு முன் சோஷியலிசத்தின் கொள்கைகளைக் கைப்பற்றியவனாகத்தான் இருந்து வந்தான். குடும்ப சொத்துக்கள் எல்லாம் பொது சொத்துக்களாகவே இருந்தன. இன்றைக்கும் நாகரீகம் என்று சொல்லப்படும் அநாகரீகம் பரவாத தேசங்களிலும், மலைப்பிர தேசங்களிலும் சோஷியலிசம் இருந்து கொண்டே வருகிறது. வட இந்தியாவில் எல்லைப்புர மாகாணத்தில் உள்ள சிலவகுப்புகளில் 20வருஷத்துக்கு ஒருதடவை எல்லா நிலமும் சொத்துக்களும் சமமாகப்பிரிக்கப்படுகின்றன. ஜீவிக்க ஏதுஇல்லாத அந்த தேசத்திலும் பூர்வீக சோஷியலிசததை கைக்கொண்ட வகுப்பாரே சுகத்தில் இருந்து வருகிறார்கள். மற்ற வகுப்பார்களில் ஏதோ சிலர் நல்ல ஸ்திதியில் இருந்தபோதிலும் பெரும்பான்மையோர் சாப்பிட சாப்பாடும் இல்லாமல் திண்டாடுகிறார்கள்.

மனிதன் தன் இயற்கை வாழ்க்கையை விட்டு ஆசையை விருத்திசெய்த காலத்தில் இருந்துதான் அவனுக்குக் கஷ்டங்களும் திருப்தியற்ற ஓயாதகவலைகளும் ஏற்பட்டன. மானிட சமுதாயத்தின் கவலைக்குக் காரணம் மனிதர்களின் இச்சைதான் என்று கவுதமபுத்தர் சொன்னது நாம் கருதும் அருத்தத்தில் சரியாகத்தான் இருக்கிறது. பேராசை பிடித்த முதலாளிக் கூட்டத்தார்களை அடக்கி நியாயம் பரவும்படி செய்ய அநேகர் முயன்றார்கள். அப்படி முயன்றவர்கள் பட்ட பாட்டுக்கும், கஷ்டத்துக்கும் அளவு கிடையாது "சத்தியத்துக்குப் பாடுபட்டால சோற்றுக்குத் திண்டாட்டம்" என்று ஒரு தொழிலாளி சொன்னதை நாம் கேட்டோம். இந்த வார்த்தைகளை தங்கத் தகட்டில் எழுத வேண்டும். சத்தியத்தை நிலைநாட்ட மேல்நாட்டில் நடந்த ஆரம்ப முயற்சிகளைப் பற்றி நாம் இந்தக் கட்டுரையில் சற்று ஆராய்வோம்.

நீண்ட காலமாக மேல் நாட்டிலுள்ள சில படித்தவர்களும், சாதுக்களும் தாங்கள் தங்கள் புத்திக்கு எட்டியவாறு சோஷியலிசத்தைப்பற்றிபோதித்து வந்தார்கள். அப்படி போதித்து வந்தவர்களில் முக்கிய மானவர்கல் வின்ஸ்டன்லி (Wins tanly,) பீடர் சேம்பர்லின், ஜேம்ஸ் ஹார்ரிங்டன் முதலியவர்கள். இவர்களுக்கெல்லாம் முன்னமேயே மோர் என்பவர் அவர் எழுதிய புஸ்தகத்தில் சமதர்மத்துக்கு வழிகாட்டியிருக்கிறார். சர் தாமஸ் மோர் 16ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வசித்து வந்தஒரு பெருமான். அவர் எழுதிய புத்தகம் உடோபியாவில் மனிதர்களெல்லாம் சமமாய் இருக்கவேண்டு மென்றும் சாதி மத வித்தியாசங்கள் இருக்கக் கூடாதென்றும் ஏழை பணக்காரனென்ற வித்தியாசம் இருக்கக்கூடாதென்றும் எழுதி இருக்கின்றார். அந்தப்புஸ்தகத்தைப் படித்தவர்களுக்கு சமதர்மத்தின்மீது அதிக அபிமானம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

காம்பெனெல்லா (Campanella) என்பவர் இத்தாலிய தேசத்தில் 17ம் நூற்றாண்டில் வசித்தவர். அவரும் தன்னுடைய சிவிடஸ் சோலிஸ் என்னும் புத்தகத்தில் மனிதர்களெல்லாம் ஒன்றாக இருக்க வேண்டுமென்றும் பொருள், நிலம் முதலியவைகள் எல்லாம் பொதுவாக இருக்க வேண்டுமென்றும் எழுதி இருக்கிறார். அவருடைய புத்தகத்தின கொள்கையும் ஐரோப்பியநாட்டில் ஏராளமாகப் பரவி இருந்தது. வின்ஸ்டன்லி, ஜான்பெல்லர் (Beller) பீடர்சேம்பர்லின் முதலியவர்களும் சமதர்மத்துக்காக மிகவும் கஷ்டப் பட்டார்கள். ஜேம்ஸ் ஹார்ரிங்டன் என்பவர் 17-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வசித்தார். அவருடைய புத்தகத்தில் ஒருமனிதன் அளவுக்குமேல் நிலம் வைத்திருக்கக்கூடாதென்றும் நாட்டில் உள்ள பொருளாதார அநியாயங்கள் நீங்கவேண்டுமென்றும் எழுதி இருக்கிறார். ஒஷியான (Oceana) என்னும் மேல்படி புஸ்தகம் அச்சிடப்படும்போதே பறிமுதல் செய்யபபட்டது. இரண்டாம் சார்லஸ் அரசனால் சிறையில் அடைக்கப்பட்டு அவர் 1677ம வருஷத்தில் மரணமடைந்தார்.

18ம்-நூற்றாண்டில் மாப்லி (Mably) யும் மோரெல்லி (Morelly) யும் சமதர்மத்துக்காக பாடுபட்டார்கள். அவர்கள் சமதர்மம் ஏற்படவேண்டும் என்றும் நிலத்தை எல்லாம் சேர்ந்து சாகுபடி செய்து பலனை எல்லோரும் அடைய வேண்டும் என்றும் தனித்தனியாக சாகுபடி செய்யக் கூடாதென்றும் பொருள் உற்பத்தி நல்ல ஏற்பாடோடும்கட்டுப்பாடோடும்செய்யப்பட வேண்டுமென்றும், பொருள் பிரிவினை சமூக அனுமதியின்மேல் ஜனங்களின் பிரதிநிதிகளால் சமமாகப்பிரிக்கப்பட வேண்டுமென்றும் போதித்தார்கள். 18ம். நூற்றாண்டின் முடிவில் பிரான்சு தேசத்தில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டது. அந்தக்காலத்தில் முதல் முதலாக கிறக்கஸ் பாபியுப் (Grachus Babeuf) என்பவர் தொழிலாளாகள தான் தேசத்துக்கு அதிபதியாக இருக்க வேண்டும் என்றும் தேசத்தை ஆளும் உரிமையும் பொருள், சுகம் முதலியவைகளை சமமாக பாதிக்கும் உரிமையும் தொழிலாளர்களுக்குத்தான் உண்டென்றும் போதித்தார். தொழிலாளர்கள் ஒன்றாகக் கூடி அரசாங்கத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் தொழிலாளர்களை முதல்படையாக வைத்து முன்னணியில் நிறுத்தி புரட்சியை நடத்த வேண்டுமென்றும் முதலில் எடுத்துககாட்டியவர் மேல் கூறியவரே யாவார்.

மேல்நாட்டில் சோஷியலிசத்தை முதல் முதலில் உருவகப் படுத்திக் காட்டியவர் ராபர்ட் ஓவன் (Robert Own) என்பவர். அவர் முதல் முதலில் நமது தோழர் ஈ. வெ. ராமசாமியைப் போல்தான் சமூக சீர்திருத்தத்தில் தலையிட்டு பாடுபட்டு வந்தார். ஆனால் நாளுக்கு நாள் ஏழை ஜனங்கள் படும் கஷ்டங்களைக்கண்டு அவர் ஏழைஜனங்களைக் காப்பாற்றும்படிக்கும் அவர்களுக்கு வேலையளித்து கிராமங்களைச் சீர்திருத்தி அவர்களை யெல்லாம் கொண்டு தேச செழிப்பையும், ஜனங்களின் செழிப்பையும் அதிகப்படுத்துமாறு சர்க்காருக்கு ஒரு நீண்ட மனு செய்துகொண்டார். சர்க்கார் அந்த மனுவை தள்ளிவிட்டது. பிறகு பிரபுக்கள் இடத்தில் மனு செய்துகொண்டார். அவர்களும் ஷை மனுவை தள்ளிவிட்டார்கள். அதற்கு பிறகு அவர் தொழிலாளிகளின் சங்கங்கள் ஏற்படுத்தி தன் கொள்கைகளை பலப்படுத்திக்கொண்டார். ஓவன் அவர்களைப்பின்பற்றுபவர்கள் டிரேட் யூனியன்களில் நுழைந்து அவைகளை வசப்படுத்திக்கொண்டார்கள். ஆனால் 1834ம் வருஷத்தில் சர்க்காரும் முதலாளிகளும்கூடி அகிலதேசிய டிரேட் யூனியனை தாக்கி அதை சின்னாபின்னமாக்கி விட்டார்கள். அந்தக்காலம் முதல் சில வருஷங்கள் வரை ஓவன் அவர்களின் கொள்கை இங்கிலாந்தில் தலையெடுக்க முடியாமல் போய் விட்டது.

ஓவன் அவர்கள் சர்க்கார் தொழிற்சாலைகளை வசப்படுத்த வேண்டுமென்றும் உற்பத்தியும் பிரிவினையும் கூடியவரை சமமாக இருக்கவேண்டுமென்றும் போதித்தார். ஓவன் அவர்களின் கொள்கை வெளிப்படையாக தோல்வியடைந்தபோதிலும் உள்ளாந்தரத்தில் சோஷியலிசத்தை மேலும் மேலும் பரவச் செய்வதற்கு ஒரு பெரிய கருவியாக இருந்துகொண்டு வந்தது. ஓவன் அவாகள் காலத்தில் தான் சோஷியலிசத்தைப் பற்றி அநேக நிபுணர்கள் தீர்க்க ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். இந்தக் காலத்தில் தான் அநேக படித்தவர்கள் முதலாளிகளையும், முதலாளித்தனமையை (Capitalism)யும்தாக்கி கடினமாகஎழுத ஆரம்பித்தார்கள்.

இப்பேர்ப்பட்ட சம்பவங்கள் இங்கிலாந்தில் தீவிரமாய் நடந்து கொண்டு இருககும்போது பிரஞ்சியர்களும் சமதர்மத்தைப்பறறி தீர்க்க ஆராய்ச்ச செய்ய ஆரம்பித்தார்கள். ஓவன் அவர்கள் இங்கிலாந்தில் தன் கொள்கைகளை போதிக்கும்போது பிரஞ்சு தேசத்தில் கவுண்ட் ஹென்ரி செயின்ட்சிமன் என்பவரும் சால்ஸ் போரியர் என்பவரும் சமதர்மத்தைப போதித்தார்கள்.

1830ம் வருஷத்தில் பிரான்சு தேசத்தில் நடந்த புரட்சிக்குப் பிறகு பிரான்சில் சோஷியலிசத்தின் தன்மை அதிகமாக மாறி விட்டது. லூயி அகஸ்டஸ்பி

தொடர்ச்சி 14ம் பக்கம பார்கக

# ஆதிதிராவிடர் கேள்வியும், காந்தியாரின் பதிலும்.

(C. R. D. மொழிபெயர்ப்பு.)

ஏப்ரல் 20ந்தேதி ஹரிஜனப் பத்திரிகையில் தோழர் காந்தியை ஒரு ஆதிதிராவிடர் கேட்ட பத்து கேள்விகளும், அவைகளுக்குத் தோழர் காந்தியார் விடுத்த பதில்களும் வெளியாயிருக்கின்றன.

அக்கேள்விகள் மிகவும் முக்கியமானவைகள் என்று தோழர் காந்தியார் குறிப்பிட்டிருப்பதினாலேயும், அதன் பதில்கள் மிகவும் ருசிகரமாய் இருப்பதினாலேயும் அதை எடுத்துப் போடவேண்டியதாயிற்று என்று மரர்டர்ன்ரிவியூபத்திரிகைபிரசுரித்திருப்பதில் அவற்றை நான் மொழிபெயர்த்து பகுத்தறிவுக்கு அனுப்புகிறேன்.

கேள்விகள் 1. காந்தியாரே! ஹரிஜனங்களாகிய எங்கள் விஷயத்தில் தாங்கள் இவ்வளவு சிரத்தை காட்டுவதற்குக் காரணமென்ன?

2. எல்லா மதங்களும் ஒன்றுதான் என்று தாங்கள் சொல்லும்போது "கிறிஸ்தவர்கள் தீண்டாமைவிலக்கு வேலையில் பிரவேசிக்கக் கூடாதா?"

3. ஆரியன், ஆரியன் அல்லாதவன் என்கின்ற பேதங்கள் நமக்காக சிருஸ்டிக்கப்பட்டிருக்கும்போது நாங்கள் தனித்திருப்பதால் என்ன கெடுதி!

4. தீண்டாமை எப்போது ஒழிகிறதோ அப்போதுதான் சுயராஜ்யத்தைக் காணமுடியும்? என்று நீங்கள் ஓர் காலத்தில் சொன்னீர்கள். அந்த லக்ஷியத்தோடு தான் இன்று உமது பிரசாரங்கள் நடக்கின்றனவா?

5. அப்படியாயின், கோடிக்கணக்கான தீண்டாதார்களுக்கு மற்ற ஹிந்துக்களுக்கிருக்கும் சகல உரிமைகளையும் சமமாகக் கொடுக்கச் சம்மதிப்பீரா?

6. எங்களுக்கு கோவில்களைத் திறந்துவிடுவதைக் காட்டிலும், தீண்டாமை ஒழிப்பதைக் காட்டிலும், எங்கள் பிழைப்பிற்கு நீங்கள் ஒரு ஏற்பாட்டைச் செய்து வைத்தால் அதுவேபோதும்.

காந்தியாரின் பதில்கள்.

1. என்னுள் இருக்கும் தீண்டாமை என்னும் அழுக்கைப்போக்கி என்னை சுத்திகரித்துக்கொள்ளவும், அப்பாபம் ஒழிய பிராயச்சித்தம் செய்து கொள்ளவுமே நான் ஹரி ஜனங்கள் விஷயத்தில் சிரத்தை கொண்டிருக்கிறேன். மேலும், நான் கொண்டுள்ள மதத்தின் பரம்பரைக் கீர்த்தியின் நீடிப்பின் பொருட்டு அம்மதத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் முன் வந்துஉழைக்க வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.

2. கிறிஸ்தவர்களுக்கும் தீண்டாமையை ஒழிக்க உரிமையுண்டு. அது அவர்களின் முக்கிய கடமை. எந்தத் தீண்டாமையை? தங்களுக்குள் இருக்கும் தீண்டாமையை மட்டுந்தான் இந்து மதத்திலிருக்கும் தீண்டாமையை கிறிஸ்தவர்கள் ஓட்ட வரலாமா என்று கேட்பதாயிருந்தால் அவர்களால் அதை ஓட்ட முடியாது என்பது தான் என்னுடைய பதில் ஏனென்றால் ஹிந்து மதத்தின் தீண்டாதவர்கள் கிறிஸ்தவர்களுக்கு தீண்டாதவர்களாக மாட்டார்கள் ஹிந்துக்கள் தங்கள் குற்றத்தைஉணர்ந்து அதைப் போக்க பிரயத்தனப்படுவதுஎன்பது தான்தீண்டாமை ஒழிப்பு இயக்கமாகும். ஆகையால் இதில் ஹிந்துக்கள் அல்லாதாருக்கு ஒரு வேலையுமில்லை. அதுபோலவே கிறிஸ்தவர்களுக்குள்ளும், முகமதியர்களுக்குள்ளும்மதசீர்திருத்தங்களை ஹிந்துக்கள் செய்ய முடியாது. கிறிஸ்தவர்கள் தீண்டாதாரை மதம் மாற்றுவதின் மூலம் ஹிந்துக்களில் உள்ள தீண்டாமையை ஓட்டி விடலாம் என்பது கேள்வியின் அர்த்தமானால் அப்படிச்செய்வது ஹிந்துமதத்திற்கோ, அல்லது ஜாதி ஹிந்துகளுக்கோ எந்த விதத்திலும் நன்மை செய்வதாகாது. ஜாதி ஹிந்துக்களுக்குள் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவது தான் இந்த இயக்கத்தின் முக்கிய வேலை. ஜாதி ஹிந்துக்கள் தங்கள் பாபத்தை உணர்ந்து அதைப் போக்க பிராயச்சித்தம் செய்து கொள்ள முற்பட்ட அந்தக்ஷணத்திலேயே தீண்டாதார்கள் தீண்டாமைப்பிடியிலிருந்துவிடுபட்டுவிடுவர். மத மாற்றம் இதை ஒரு போதும் செய்யாது. அதற்குப் பதிலாக அது எற்கனவேயுள்ளதுவேஷத்தை அதிகப்படுத்துவதோடு புதிய தொல்லைகளையும் விளைவிக்கும். அவ்விதத தொல்லைகள் சிறிது சிறிதாக ஹரிஜன சேவா சங்கத்தின் சேவையாலும் ஹிந்து மதத்திற்குள் செய்யப்பட்டு வரும் சீர்திருத்தங்களாலும் குணமடைந்து வருவதோடு தீண்டாமையும் நாளுக்கு நாள் பலம் குறைந்து வருகிறது.

3. இவன் ஆரியன்,இவன் ஆரியனல்லாதவன் என்று எவனாலும் கண்டுபிடித்து சொல்ல முடியாது. இந்த இரு கூட்டத்தாரும் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பே கலப்படமாகி விட்டதாகச்சரித்திரக்காரரும் சொல்லுகின்றனர். அப்படியிருக்க இப்போது அப்படிப்பட்ட பிரிவுகளை ஏற்படுத்த முயற்சித்தால் அது ஹிந்துக்களுக்குமட்டுமல்ல, இந்தியாவுக்கு மட்டுமல்ல, மனிதவர்க்கத்துக்கே கேடு விளைவிப்பதாகும்.

4. நான் தீண்டாமை ஒழிந்தால் தான்சுயராஜ்யம்வரும் என்று சொன்னது உண்மையே. அதை நான் மறுபடியும் ஊர்ஜிதப் படுத்துவேன். ஆனால் தற்போதைய பிரசாரம் ஜாதி ஹிந்துக்களை புனிதப்படுத்துவதின் மூலம் ஹிந்து மதத்தைப்புனிதப்படுத்துவதற்காகவே நடத்தப்படுகிறது. இந்தப்புனிதத்தன்மை ஏற்பட்டு விட்டதானால் சுயராஜ்யமும் இன்னும் மற்றவைகளும் தானே வலிய வந்தடையும் இங்கு சுயராஜ்யம் என்பது வெறும் அரசியல் உரிமை மட்டுமல்ல இன்னும் அதை விட மேலானதும், சாஸ்வதமானதுமான ஒன்றைக்குறிக்கும்.

5. சுயராஜ்யம் என்னும் பதத்திற்கு எந்த வித வியாக்யானம் செய்த போதிலும், ஹிந்து சமூகத்தைச்சேர்ந்த எல்லோருக்கும் சரிசமத்துவமான உரிமைகளை அளிக்காவிட்டால் தீண்டாமை ஒழிப்பு என்பது ஒரு மோசடி என்றே சொல்ல நேரிடும்.

6. கோடிக்கணக்கான மக்களின் பிழைப்புக்கான ஒரு ஏற்பாட்டை என் ஒருவனால் அதிலும் சாதாரண எளிய மனிதனாகிய என்னால் செய்து வைப்பதென்பது என் சக்திக்கு மீறியதாகும். இதை அவர்கள் தங்களின் தன் முயற்சியாலும், கடவுளின் அருளாலும் மட்டுமன்றி வேறொன்றாலும் பெற முடியாது. ஆயினும் கோயில் நுழைவும், தீண்டாமை யொழிப்பும் அவர்களைத்தலை தூக்காது நசுக்கும் பாரதகினின்று விடுவிக்கும். பிறகு அவர்கள் மற்ற மனிதர்களைப் போல் சகல உரிமைகளையும் பெற்று அதன் காரணமாக யோக்யமான பிழைப்பையும் பெறுவார்கள்.

# "இரணியன்" அல்லது இணையற்ற வீரன்.

## சீர்திருத்த நாடகம்.

### சிறந்த காட்சி.

சென்னை சீர்திருத்த நாடகசபையார் "இரணியன்" என்ற நாடகத்தை 9-9-34 மாலை விக்டோரியா பப்ளிக்ஹாலில் அதி விமரிசையாக நடித்துக்காட்டினார்கள். இந்நாடகத்தைக் கண்டுகளிக்க ஏராளமான ஜனங்கள் கூடியிருந்ததோடு, நகரிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் பிரபலஸ்தர்கள் பலர் வந்திருந்தனர்.

தற்காலம் வழங்கப்படும் இரணியன் கதையை யாவரும் அறிவார்கள். 9 தேதி நடித்த இரணியன் கதை தமிழர்சுயமதிப்பைக் காக்கும் முறையில் திருத்தி எழுதியதாகும்.

கதையின் வரலாறு;—

பழைய கதை.

ஹரிபக்தனான பிரகலாதனை,ஹரிபக்தனாயிருப்பதிலிருந்து விடுபடும்படி அவன் தந்தையும், அசுரனுமாகிய இரணியன் கட்டாயப்படுத்தியதாகவும், பக்தன் கஷ்டத்தைக் கண்டு சகிக்காத நாராயணமூர்த்தி, இரணியன் உதைத்த தூணிலிருந்து தோன்றி இரணியனைக் கொன்றதாகவும் பழைய கதை வழங்குகிறது. இது கட்டுக்கதை என்பது புதிய கதையின் கொள்கை.

சீர்திருத்திய கதை.

இரணியன், சிறந்த தமிழ் மன்னன். நீதி நெறிதவறாதவன். எதிர்த்து நின்று போர் புரியும் பகைவரை மதித்து நடக்கும் மனத்தினன். பின் புறத்தில் மறைந்திருந்து சதி செய்யும் வஞ்சகர்களுக்கு ஜன்ம சத்துரு. சிறந்த தமிழ் மன்னனாகிய இந்த இரணியனை ஒழித்து ஆரிய தர்மத்தை நிலைநாட்ட வேண்டுமென்று ஆரியர்கள் சூழ்ச்சி செய்தார்கள்.

இரணியன் அவற்றையெல்லாம் சமாளித்து வந்தான். பிரகலாதன் பாலியன். தேசசஞ்சாரத்திற்கு என்று தகப்பனால் அனுப்பப்பட்ட போது வழியில், ஆரியர்கள் நயவஞ்சகமாக ஒரு அழகுள்ள ஆரிய மாதைக் கொண்டு பிரகலாதனை வசப்படுத்தி தந்தைக்கு தெரியாமல் அவனை தங்கள் சுவாதீனம் செய்து கொண்டார்கள். பிரகலாதன் ஆரியப்பெண்ணின் மையலில் மயங்கி, தன்னாட்டின் மதிப்பையும், தந்தையையும் மறந்து, தான் தமிழருக்கு இழைக்கும் கேட்டையும் எண்ணாது ஆரியர் வஞ்சகத்திற்கு உடன்பட்டான்.ஆரியப்பெண் தனது தந்திரத்தால்இரணியன் மீது பல பழிகளைச் சுமத்தி பிரகலாதனுக்கு ஆத்திரத்தை மூட்டுகிறாள். தன் தாயும், உற்றார் உறவினரும் அரசனால் சிறைப்படுத்தப்பட்டார்களென்று பொய் சொல்லி, சிறையிலிருந்து மீட்கவெனக் கூறி இவ்வாரியப்பெண் பிரகலாதனுடன் அரண்மனைக்கு மாறு வேடத்துடன் செல்லுகிறாள். நடு நிசியில் இரணியன் தூங்கிக்கொண்டிருக்கையில் அப்பெண் இரணியனை மார்பில் குத்துகிறாள். காயத்துடன் எழுந்த இரணியன் குத்தியவள் பெண்ணானதால் மன்னித்துப் பெருந்தன்மையோடு அவளை அனுப்பி விடுகிறான். இச்சதி வீணானதும ஆரியர் சூழ்ச்சி அதிகரிக்கிறது.

பிரகலாதனை மயக்கிய இதே ஆரியப் பெண், பிரகலாதனுக்குத் தெரியாமல் இரணியனின சேனாபதியையும் சுவாதீனம் செய்துகொள்ள எண்ணி தான் அவரைமணப்பதாகவும் பிரகலாதனைக் கொண்டு இரணி

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

# பகுத்தறிவு.

ஈரோடு 1934௵ செப்டம்பர் 16-௳


## நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்.

வரப்போகும் இந்திய சட்டசபைத் தேர்தலில் சுயமரியாதைக்காரர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் மேலால், நடக்கவேண்டிய பிரசாரங்களைப் பற்றியும் எனக்குப் பல கடிதங்களும், கேள்விகளும் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றுள் தோழர் C. D. நாயகம் அவர்களுடைய கடிதம் முக்கியமானது சுயமரியாதைக்காரர்களுக்கு தேர்தல்விஷயத்தில் இன்ன கட்சியைத் தான் ஆதரிப்பது என்கின்ற எவ்வித நிபந்தனையும் இதுவரை ஏற்படவில்லை என்பது யாவரும் அறிந்ததே. தேர்தல்களில் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் என்கின்ற தன்மையை மாத்திரம்தான் இதுவரை சு. ம. காரர்கள் கவனித்து வருகிறார்கள். சுயமரியாதைக்காரர்கள் ஏதாவது ஒரு கக்ஷியை ஆதரிப்பது என்கின்ற நிலை ஏற்படவேண்டுமானால் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் என்கின்ற கொள்கைக்குப்பாதகமில்லாமல் நமது குறைந்த பட்சக் கொள்கையை ஒப்புக்கொள்ளக் கூடிய கட்சியைத் தான் ஆதரிக்க வேண்டிவரும்.

ஜஸ்டிஸ்கட்சியோ! பார்ப்பனர்களைச்சேர்த்துக் கொள்ளப்போகின்றது. அதற்கேற்றாப்போல் சுயமரியாதைக்காரர்கள் பலருக்கும் காங்கிரசில் சேரலாமா என்கின்ற எண்ணம் இருந்து வருகின்றது. சுயமரியாதைக்காரர்களுக்கு ஜஸ்டிஸ் கக்ஷியானது பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொண்டு, வகுப்புவாரிப்பிரதிநிதித்திட்ட கொள்கையையும் அது வழவழா செய்து விட்டு பார்ப்பனரல்லாத தொழிலாளிகள் தாழ்த்தப்பட்டவர்கள் ஆகிய ஏழை மக்கள் விஷயத்தில் தக்க மாறுதலுக்கு ஏற்பாடு செய்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரத்தக்க கொள்கையும், திட்டமும் கொண்டதாக இல்லையானால் சுயமரியாதைக்காரர்களில் பலர் காங்கிரசில் சேருவதை நாம் ஆக்ஷேபிக்க முடியாது.

காங்கிரஸ் பார்ப்பனர் ஆதிக்க ஸ்தாபனம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் ஜஸ்டிஸ் கக்ஷி இன்று பணக்காரர்கள் ஆதிக்க ஸ்தாபனம் என்று சொல்லத்தக்க நிலையில் இருப்பதை யாராவது மறுக்க முடியுமா? என்று கேட்கிறோம். "புழுத்ததின் மீது நாய் விட்டை இட்டது" என்பது போல் ஜஸ்டிஸ் கக்ஷி இந்நிலைமையில் பார்ப்பனர்களையும் சேர்த்துக்கொள்வது என்கின்ற முடிவுக்கு வந்துவிட்டால் பிறகு காங்கிரசுக்கும், இதற்கும் என்ன வித்தியாசம் என்பது நமக்கு விளங்கவில்லை?

ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனர்களை வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளட்டும். என்றாலும் அதன் பிறகு செய்யப்போகும் காரியம் என்ன என்பதை மக்களுக்கு விளக்கவேண்டாமா? என்றுதான் கேட்கின்றோம்.

சமுதாய விஷயத்தில் காங்கிரஸ் பெரிதும் பிற்போக்கான புத்தியுடையது என்பதையும், வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு முட்டுக்கட்டை போடுகின்றது என்பதையும், பார்ப்பன ஆதிக்கத்தைத்தான் சுயராஜ்யம் என்று சொல்லப்படுகின்றது என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளுகிறோம்.

அது போலவே ஜஸ்டிஸ் கட்சியும் உண்மையான வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்துக்கு இடையூறாக ஆகிக்கொண்டு வருவதுடன் சமுதாய விஷயத்திலும், பொருளாதாரத்துறையிலும் மிகவும் பிற்போக்கான தன்மையில் போய்க் கொண்டிருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டி இருக்கின்றது.

காங்கிரஸ் ஸ்தாபனங்களில் பார்ப்பனர்கள் எண்ணிக்கை அதிகமாய் இருப்பது போலவே ஜஸ்டிஸ் ஸ்தாபனங்களில் பணக்காரர்களுடைய எண்ணிக்கையே அதிகமாய் இருக்கின்றது.

காங்கிரசில் எப்படி பார்ப்பனக் கூலிகளே பெரிதும், "பார்ப்பனரல்லாதாராய்" விளங்குகின்றார்களோ, அதுபோலவே பணக்காரர்களின் கூலிகளே பெரிதும் "ஏழை மக்களாகவும், தாழ்த்தப்பட்டமக்களாகவும்" விளங்குகின்றார்களே ஒழிய உண்மையான ஏழைகள் தொழிலாளிகள் தாழ்த்தப்பட்டவர்கள் என்பவர்களுக்கு அதில் இடமில்லாமல் செய்யப்பட்டு வருகிறது.

சுயமரியாதைஇயக்கம்உண்மையான சமத்துவ நோக்கம் கொண்டது என்று ஒரு நடு நிலைமை நியாயாதிபதியின் தீர்ப்பைப்பெற வேண்டுமானால் இன்றைய ஜஸ்டிஸ் கட்சியையும், காங்கிரசையும் ஒன்று போல இல்லாவிட்டாலும், ஒன்றுக்கொன்று பிரமாத வித்தியாசம்கொண்டதல்ல என்றுதான் கருதியாகவேண்டும் என்கின்ற நிலைமை ஏற்பட்டு விட்டது.

சுயமரியாதை இயக்கமானது காங்கிரசினால் அதன் முழுபலத்தோடு எதிர்க்கப்பட்டு வந்தது உண்மை என்றாலும் அதனால் யாதொரு கெடுதியும் சு. ம. இயக்கத்திற்கு ஏற்பட்டு விடவில்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அதோடு சுயமரியாதை இயக்கம் காங்கிரசையும் அதன் தலைவர்களையும் சிறிதும் தயவு தாட்சண்யமின்றி சமய சந்தர்ப்பமின்றியும் நண்பர் நண்பரல்லாதவர்கள் என்பதையும் கவனியாமல் வெளியாக்கியும் எதிர்த்தும் வந்திருக்கின்றது.

ஆனால் சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கட்சியை சமயசந்தர்ப்பம் இல்லாமல் ஆதரித்தும், நல்லவர் யார், கெட்டவர்யார்? பொதுநலத் தலைவர் யார், சுயநலத்தலைவர் யார்? என்பதைக் கவனிக்காமலும் எல்லாச் சமயத்திலும் அவர்களது எல்லாக் காரியத்தையும் ஆதரித்துவந்திருக்கிறது.

இவற்றின் பயன் என்னவாய் முடிந்தது என்றால் காங்கிரசினால் சுயமரியாதை இயக்கத்துக்கு எவ்வித கெடுதலும் செய்ய முடியவில்லை என்பதோடு காங்கிரஸ்காரருக்கு சுயமரியாதை இயக்கத்தை தழுவ வேண்டும் என்கின்ற எண்ணம் சில காங்கிரஸ்காரரிடமாவது வந்து இருக்கிறது.

ஜஸ்டிஸ்கட்சிக்கோ பல நன்மைகள் செய்யக்கூடிய சந்தர்ப்பமிருந்திருந்தும் அது சுயமரியாதை இயக்கத்துக்கு யாதொரு நன்மையும் செய்ய வில்லை என்பதோடு சுயமரியாதை இயக்கத்தை ஒடுக்க ஜஸ்டிஸ் கட்சியார் முயற்சிக்கிறார்கள் என்று பொதுஜனங்கள் நினைக்கவேண்டிய அளவுக்கும் தைரியமாய் நடந்து கொண்டதானபலன் தான் ஏற்பட்டது என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டி இருக்கிறது.

எப்படி இருந்த போதிலும் சுயமரியாதைக்காரர்கள் சமூகவாழ்வு விஷயத்திலும், பொருளாதார விஷயத்திலும் தாழ்த்தப்பட்டு ஜீவனத்துக்குக் கஷ்டப்படும். இழி மக்களாய்க் கருதப்படும் பார்ப்பனரல்லாதார் முன்னேற்ற விஷயத்தைத் தங்களது முக்கிய நோக்கங்களில் ஒன்றாய்க் கொண்டிருப்பதை மாற்றிக்கொள்ள முடியாது.

சுயமரியாதைக்காரர்கள் பொருளாதார விஷயத்தையே முக்கியமாய் கருதுவதா? அல்லது ஜாதி, மத மூடநம்பிக்கை ஆகியவைகளின் கொடுமையிலிருந்து மக்களை விடுவிக்கும் வேலையையே முக்கியமாய் கருதுவதா என்பதை இப்போது ஒரு முக்கிய பிரச்சினையாக சில சு. ம. தோழர்கள் கிளப்பி விட்டிருக்கிறார்கள். இதை சீக்கிரத்தில் முடிவு கட்டித்தான் தீரவேண்டும்.

சமுகாய விஷயத்திலேயே உழைப்பதென்றாலும் ஜாதி மத மூட நம்பிக்கை விஷயத்தில் உழைப்பதானாலும் பொருளாதாரப்பிரச்சினை அதிலிருந்து விலகியதாகாது. எவ்விதப் பிரசாரமும், சட்டத்திற்கும், சமாதானத் தன்மைக்கும் கட்டுப்பட்டு செய்வது என்பதுதான் சுயமரியாதைக்காரர்கள் கொள்கை என்பதை நாம் மறுபடியும் ஒரு தரம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

ஆனால் சட்டத்திற்கு உட்பட்டுச் செய்யப்படும் பிரசாரம் என்பதில் ஜாதிமத பொருளாதார மூடநம்பிக்கைகளை ஒழித்தலும், உயர்வு தாழ்வை அகற்றலுமான கொள்கை சேர்ந்ததல்ல என்று அரசாங்கத்தார் கருதுவார்களானால் அது விஷயத்திலும் நாம் —சுயமரியாதைக்காரர் சீக்கிரத்தில் ஒரு முடிவுசெய்து கொள்ள வேண்டியவர்களாய்இருக்கிறோம்.

எனவே இந்த விஷயங்கள் எல்லாம் சமீபத்தில் நடைபெறப்போகும் ஜஸ்டிஸ் கட்சி மகாநாடும், காங்கிரஸ் மகாநாடும், மாகாண மகாநாடும் நடந்தவுடன் சுயமரியாதை மகாநாடோ, அல்லது சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் மகாநாடோ ஒன்று கூட்டி அதில் முடிவு செய்து கொள்ள வேண்டியவர்களாயிருப்பதால் அதுவரையில் எல்லாத் துறையிலும் நம் தோழர்கள் பொருத்து இருக்க வேண்டும் என்றும், அதை எதிர்பார்த்தே நானும் பொருத்து இருக்கிறேன் என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சுயமரியாதைச் சங்கத் தலைவர் என்கின்ற முறையில் தோழர் R. K. ஷண்முகம் அவர்களது அபிப்பிராயமும் இதில் கலந்து இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஈ. வெ. ராமசாமி.

# இந்திய சட்ட சபைத் தேர்தல்.

இந்திய சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் போட்டி போட முடிவு செய்து ஆங்காங்கு மாகாணம் தோறும் காங்கிரசின் சார்பாய் அபேட்சகர்களை நிறுத்திப் போட்டி போடுகிறார்கள்.

காங்கிரஸ்காரர்களுக்குள்ளாகவே இது விஷயத்தில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுத் தேர்தலில் பிரவேசிக்கக்கூடாது என்று சொல்லி ஒரு கூட்டத்தார் விலகிக்கொண்டார்கள்.

மற்றொரு கூட்டத்தார் தாங்கள் நேரே தேர்தலில் நிற்காமல் மற்றவர்களுக்கு உதவி செய்து "காங்கிரசின் கௌரவத்தைக்காப்பாற்றுகின்றோம்" என்று அபேட்சகர்களாக நிற்பதில் இருந்து விலகி இருக்கிறார்கள்.

மற்றொரு கூட்டத்தாரோ! காங்கிரஸ் அபிமானிகள் என்று தங்களைச் சொல்லிக்கொண்டபோதிலும்கூட காங்கிரஸ் கொள்கைகள் சில தங்களுக்குப் பிடிக்கவில்லை என்றும், அக்கொள்கைகளுக்கு மாறாகத் தாங்கள் நடக்கவேண்டி இருக்கிறதென்றும் சொல்லி கட்டுப்பாட்டிலிருந்து விலகி காங்கிரஸ் கட்டளைக்கு விரோதமாய் நடக்கத் தீர்மானித்து எதிர்ப்பு முறையில் ஒரு கட்சி ஏற்படுத்தி அதன் பெயரால் காங்கிரசோடு போட்டி போட முடிவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

மற்றொரு கூட்டமோ! காங்கிரசுவாதியாய் இருந்து காங்கிரசை ஆதரித்து வந்து தீவிர தேசியவாதி என்று சொல்லிக்கொண்டிருந்து காங்கிரசின் சில கொள்கைகள் பிடிக்காததினால் காங்கிரஸ்வாதி என்று சொல்லிக்கொள்ள இஷ்டமில்லாமல் தேசியவாதி என்னும் பெயரால் தனித்த ஹோதாவில் காங்கிரஸ் அபேட்சகர்களோடு போட்டி போட தேர்தலில் நிற்கிறார்கள்.

இவர்கள் தவிர ஆங்காங்கு காங்கிரஸ் கூட்டங்களில் அடிதடி கலகம், குழப்பம் ஆகியவைகள் காங்கிரஸ்காரர்களுக்குள்ளாக நடந்தும் வருகிறது.

இந்த நிலையில் தோழர் காந்தியார் காங்கிரசுக்காரர்கள் சிலரின் நடத்தைநாணயமானதாக இல்லையென்றும், அதற்காக பிராயச்சித்தம் செய்துகொள்வதாய் ஒருதடவைக்குமேல் பட்டினி இருந்தும், தனக்கு திருப்தி ஏற்படாமல் இப்போதுதானே காங்கிரசிலிருந்தே விலகி தனிப்பட்ட முறையில் வேறு வழியில் தொண்டாற்றப் போவதாய் யோசனை செய்துகொண்டிருப்பதாகவும், எப்படியாவது அவரை இந்திய சட்டசபைத் தேர்தல் வரை இருக்கும்படி பலர் கேட்டுக்கொள்வதாகவும் குறைந்த அளவு பம்பாய் காங்கிரஸ் வரையிலாவது இருக்கவேண்டும் என்று சிலர் கேட்டுக்கொள்வதாகவும் அதற்கும்கூட காந்தியார் சம்மதம் கொடுக்கவில்லை என்றும் பத்திரிகைகளில் உண்மையான செய்திகள் பறக்கின்றன.

இவைகள் எல்லாம் ஒருபக்கம் இருந்த போதிலும் காங்கிரசுக்காரர்கள் இப்போது எதற்காக இந்திய சட்டசபைக்குச் செல்லுகிறார்கள் என்பது மாத்திரம் இன்னமும் சரியான முறையில் வெளியாகவே இல்லை.

காங்கிரஸ்க்காரர்கள் தோழர் தாஸ், நேரு உள்பட முன்பு ஒரு முறை இந்திய சட்டசபைக்குச் சென்று அங்கு தக்க ஆதரவுகள் இருந்தும் ஒரு காரியமும் செய்ய முடியவில்லை என்று சொல்லிக் கொண்டு எழுந்து வந்து விட்டது யாவருவருக்கும் தெரியும்.

அன்று முதல் இன்று வரை சட்டசபை சம்மந்தமாக சர்க்காரில் எவ்வித மாறுதலும் ஏற்பட்டு விடவில்லை என்பதோடு காங்கிரஸ்காரர்களும் சட்டசபையில் போய் செய்ய வேண்டிய விஷயங்களைப்பற்றிய கொள்கைகளில் எவ்வித மாற்றமும் செய்து கொள்ளவும் இல்லை.

தேசத்தின் நிலைமையும் அன்று இருந்த நிலைமையை விட தேச மக்களின் உணர்ச்சியும் சுதந்திரமும் பிற்போக்கடைந்து ஒத்துழையாமை இயக்கம் இந்தியாவில் ஏற்படுவதற்கு முன் என்ன நிலையில் இருந்ததோ அதை விட பிற்போக்காகவும் இருப்பதோடு அரசாங்கமும் ஒத்துழையாமை இயக்கம் தோன்றுவதற்கு முன் என்ன நிலையில் இருந்ததோ அதைவிட ஆதிக்கத்தில் முற்போக்காகவும் எதேச்சாதிகாரமாகவும் தான் இருந்துவருகின்றது என்று தான் சொல்லியாக வேண்டும்.

உதாரணமாக இந்திய ஸ்தல ஸ்தாபன சுயாட்சியின் பெருமையும், சுயமரியாதையும், சுதந்திரமும் பெரும்பாகம் பிடுங்கப்பட்டுப் போய்விட்டது. மனித சுதந்திரத்துக்கும், சுயமரியாதைக்கும் பொருந்தாத சட்டங்கள் அடக்குமுறைகள் நாளுக்கு நாள் தொடர் வட்டியுடன் பெருகிக் கொண்டு வருகின்றன.

ஒத்துழையாமைக்குப்பின் அநேக விஷயங்களில் ஏழைகளுக்கு 100க்கு 25, 30பங்கு வரிகளும், சில விஷயங்களில் 100க்கு 100பங்கு வீதம் வரிகளும் உயர்ந்திருக்கிறது.

சுருக்கமாகவும், பொதுவாகவும் சொல்ல வேண்டுமானால் இந்த 15-வருஷத்திய வேலையின் பயனால் தேசம் 30-வருஷத்துக்கு முன் இருந்த நிலைமைக்கு தள்ளப்பட்டு விட்டதே ஒழிய கடுகளவும் முற்போக்கடைய வில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

இந்த நிலையில் காங்கிரஸ் இந்திய சட்டசபைக்குப்போய் செய்யக்கூடிய காரியமென்ன? என்பதை திரும்பவும் கேட்கின்றோம்.

இந்திய மக்களிடம் காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கும் கவலையும், ஜீவகாருண்யமும் நமக்கு இல்லையென்று யாரும் சொல்லும்படியாக நாம் ஒருபோதும் நடந்து கொண்டதில்லை என்கின்ற தைரியத்தின் மீது தான் காங்கிரஸ் சட்ட சபைக்குப் போய் மற்றவர்கள் செய்யக்கூடாத காரியம் என்ன செய்யக்கூடும் என்று கேட்கின்றோம்.

காங்கிரசுக்கு ஏதோ அபார சக்தி இருக்கின்றது என்பதாக (மூடநம்பிக்கை முறையில்—நம்பித்தான் ஆக வேண்டும் என்கின்ற தத்துவத்தில்) நம்பிக்கொண்டே சில விஷயங்களைக் கவனிக்க வேண்டுகிறோம்.

இதை வாசகர்கள் முக்கியமாய் கவனிக்கவேண்டுமாயும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அதாவது முதலாவதாக காங்கிரசுக்காரர்கள் சட்டசபையில் மெஜாரட்டியாக இருக்க முடியுமா என்று பார்ப்போம்.

## சட்டசபை ஸ்தானங்கள் விபரம்.

இந்திய சட்டசபைக்கு மொத்த ஸ்தானங்கள் 144.

இவற்றுள் நாமினேஷன் (சர்க்காரால் நியமிக்கப்படுவது) 40 ஸ்தானங்கள்.

மிகுதியுள்ள 104 ஸ்தானங்களில் மகமதியர்களுக்கு 30, ஸ்தானங்கள் ஐரோப்பியர்களுக்கு 8, வியாபாரிகளுக்கு 4, நிலச்சுவான் ஜமீன்தாரர்களுக்கு 7, சீக்கியர்களுக்கு 2 ஆக 51 ஸ்தானங்கள் போக மீதி உள்ளது 53 ஸ்தானங்கள் தான்.

இந்த 53 ஸ்தானங்கள் தான் பொது தேர்தலுக்கு விடப்பட்டிருக்கின்றன. இந்த 53 ஸ்தானங்களும்

| | |
|---|---|
| மதராசுக்கு | 10 |
| பம்பாய்க்கு | 7 |
| வங்காளத்துக்கு | 6 |
| ஐக்கிய மாகாணத்துக்கு | 8 |
| பஞ்சாபுக்கு | 3 |
| பீஹார் ஒரிசாவுக்கு | 8 |
| மத்தியமாகாணத்துக்கு | 4 |
| அஸ்ஸாமுக்கு | 2 |
| டில்லிக்கு | 1 |
| பர்மாவுக்கு | 3 |
| அஜ்மீருக்கு | 1 |

என்று மாகாணவாரியாகப் பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் காங்கிரஸ்காரர்கள் இந்த 53-ல் பகுதியாவது கைப்பற்ற முடியுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம். ஏனெனில் மிதவாதிகள், ஜஸ்டிஸ்கக்ஷிக்காரர்கள், சுதந்திரவாதிகள், தேசியவாதிகள், வருணாச்சிரம வாதிகள், மாளவியா கக்ஷிக்காரர்கள் முதலாகிய கக்ஷிக்காரர்கள் எத்தனையோ பேர்கள் காங்கிரசுடன் போட்டிபோடுகிறார்கள். மற்றும் ஒதுக்கிவைத்த ஸ்தானங்களில் காங்கிரசுக்கு ஒன்று இரண்டு கிடைக்கும் என்றுகூட நம்ப முடியாது என்பதோடு நாமினேஷன் ஸ்தானங்களில் ஒன்றுகூட எதிர்பார்ப்பது கவர்ன்மெண்டை நாம் சுத்த முட்டாள் என்று கருதுவதற்கே ஒப்பாகும்.

இந்த நிலையில் காங்கிரஸ்காரர்கள் ஒரு முப்பது, அல்லது முப்பத்தைந்து ஸ்தானமாவது பெறுவார்களேயானால் அதுவும் "அமாவாசை அன்றைய தினம் பூர்ணசந்திரனைப் பார்த்தேன்" என்று சொல்லக்கூடிய நிலையில் தான் இருக்கும்.

இப்படிப்பட்ட இந்த நிலை காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது என்று எந்த மூடனும் நம்ப முடியாது. அப்படி இருக்கும்போது காங்கிரஸ் இந்திய சட்டசபையைக் கைப்பற்றி சர்க்காருக்கு புத்தி கற்பிக்கப் போகிறது என்பதும், சர்க்கார் பெரிதா, காந்தியம் பெரிதா என்பதை உலகத்துக்கு மெய்ப்பிக்கப் போகின்றது என்பதும், சர்க்காருக்கும், காங்கிரசுக்கும் போர் நடக்கின்றது என்பதும், சட்டசபை மூலம் சர்க்காரை அடக்கிவிடலாம் என்பதும், வெள்ளை அறிக்கையை விரட்டியடிக்கப்போகிறோம் என்பதுமான விஷயங்களை தமிழில் சொன்னால் பிள்ளைத் தமிழ் என்றும், இங்கிலீஷில் சொன்னால், பிள்ளை இங்கிலீஷ் என்றுந்தான் சொல்ல

வேண்டியதேயல்லாமல்இவற்றில் ஏதாவது அனுபவம் வாய்ந்த அல்லது உண்மை பேசுகின்ற மக்களின் உரை என்று சொல்லத்தக்க வார்த்தை ஒன்றாவது இருக்கின்றதா என்று கேட்கிறோம்.

லார்ட் வில்லிங்டன் துரையின் ஆட்சி ஆயுள் "அனுமாருக்கு வால் வளர்ந்தது" என்பது போல் வளர்ந்துகொண்டே போகின்றது அவருடைய தந்திரமும் மனப்பான்மையும் காங்கிரக்காரருடைய தந்திரத்துக்கும் மனப்பான்மைக்கும் சற்றும் குறைந்தது என்று சொல்லிவிட முடியாது.

காந்தியாரைக் காங்கிரசிலிருந்து மாத்திரமல்ல, பொதுவாழ்விலிருந்தே விலக்கி இமயமலைக்கு தபசுக்கு அனுப்புகின்ற வரை வில்லிங்டனார் தூங்கப்போவதில்லை என்பது அவருடைய வீரமுழக்கங்களிலிருந்து குருடனும், செவிடனும்கூட உணரலாம்.

விஷயங்கள் இப்படி இருக்க சென்னை மாகாணத்தில் தோழர்கள் ஷண்முகம் மீதும், வரதராஜுலு மீதும் இரண்டொரு பார்ப்பனர்களுக்கும், அவர்களது பக்தர்களுக்கும் உள்ள ஆத்திரத்தையும் பொறாமையையும் காட்ட இந்த மாதிரியான வேஷமெல்லாம் போட்டால் காரியம் கைகூடுமா என்று கேட்கின்றோம்.

நம்நாட்டுப் பார்ப்பனர்களின் சூட்சியையும் அதன் பயனையும் யாராவது இந்த 15 வருஷ காலமாகக் கவனித்து வந்திருப்பார்களானால் பார்ப்பனர்கள் ஒவ்வொரு துறையிலும் தோல்வி அடைந்து வந்திருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

பார்ப்பனர்கள் தற்கால சாந்திக்கு ஏதோ தந்திரம் செய்து தப்பித்துக்கொள்ளலாம் என்று பார்க்கின்றார்களே தவிர நிரந்தர நன்மை ஏற்படும்படி புத்திசாலித்தனமாய் நடந்துகொள்ளத் தெரியவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

இன்னமும் சொல்லுகின்றோம் தோழர் ராஜகோபாலாச்சாரியார் போன்ற உண்மையான தியாகிகளும் பாமர மக்களை ஏமாற்றிக் காரியம் கொண்டு போகத்தக்க மாதிரியில் எழுதுவதும், பேசுவதுமாய்த்தான் இருக்கிறார்களே தவிர அறிவாளிகளை ஏமாற்றும் நிலையில் ஒரு காரியமும் செய்யத் தெரியவில்லையென்றுதான் சொல்லுவோம்.

பாமர மக்களைஏமாற்றும் தந்திரம் எப்போதுமே பயனளிக்காது என்பதை நாம் நன்றாய் அனுபவத்தில் அறிந்து விட்டோம். அது வட்டியுடன் கெடுதியைத்தான் கொடுத்துத்தீரும்.

உதாரணமாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்கின்ற உணர்ச்சி நம்போன்றவர்களுக்கு ஏற்பட்ட காலத்தில் அதற்கு ஏதாவது ஒரு வழி செய்திருப்பார்களானால் இன்று இந்தியாவில் காங்கிரசு தவிர வேறுஒருஸ்தாபனமும்ஏற்பட்டிருக்காது என்பதுடன் இந்தியமக்கள் எல்லோரும் காங்கிரசில் சேராமல் இருப்பதற்கு வெட்கப்பட்டுக் கொண்டிருப்பார்கள் என்றும் நாம் கருதுகிறோம். மகமதியர், கிறிஸ்தவர்கள், பறையர், பள்ளர், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் முதலிய பிரிவினைகள் பூதக்கண்ணாடி வைத்துப்பார்த்தாலும் காணமுடியாததாய் இருக்கும் என்று கூடச் சொல்லுவோம்.

ஜாதி உள்ளவரை மதம் உள்ளவரை வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அழித்து விடலாம் என்று சொல்லுவது காந்தியாரை மகாத்மா என்று சொல்வது போல் தான் முடியும். ஜாதிமத பேதங்களை அழித்து மக்களை ஒன்றுபடுத்துவதுதான் வகுப்பு வாரி பிரதிநிதித்துவத்தை அழிப்பதாகும்.

அப்படிக்கில்லாமல் வகுப்பு வாரிப் பிரதி நிதித்துவம் என்று சொன்னவுடன் அது தேசத்துரோகம், சர்க்கார் குலாம்......... என்றெல்லாம் பேசி அடக்கப் பார்த்ததின் பயன் இன்று "சர்வம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமயம் ஜெகத்" என்று சொல்லும்படியாக ஏற்பட்டு விட்டது.

இந்த நிலைக்கு தோழர் காந்தியாரே காரணம்என்பதோடு அந்த விளக்குக்கு எண்ணையாய் இருந்தவர் தோழர் ராஜகோபாலாச்சாரியார் எனறே சொல்லுவோம்.

இன்றும்வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தைக்காங்கிரசுக்காரா அதாவது ராஜகோபாலாச்சாரியார் ஒப்புக் கொள்ளுவாரானால் ஜஸ்டிஸ் கக்ஷியோ முஸ்லீம்லீக்கோ, மாளவியா கக்ஷியோ ஆகிய ஏதாவது ஒரு கக்ஷிக்கு இந்தியாவில் பாம்புக்கு பயந்தாவது ஒண்ட இடம் கிடைக்குமா என்று கேட்கின்றோம்.

தோழர்கள் ஷண்முகம், வரதராஜுலு போன்றவர்கள்கூட காங்கிரசை விட்டு வெளியில் இருக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

ஆகவே தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சமீபத்தில் நடக்கப்போகும் பம்பாய் காங்கிரசிலும், கோவை கான்பரன்சிலும் இதற்கு ஒரு வழி செய்து விடுவார்களேயானால் இந்தியர்களுக்குள் பிரிவினையோ அரசியல் சமூதாய விஷயங்களில் அபிப்பிராய பேதமோ காணுவதற்கில்லாமல் ஒரு கொடியின் கீழ் இந்திய மக்கள் எல்லோரையும் காணலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அப்படிக்கு இல்லாமல் இப்பொழுது நடக்கின்ற விஷயமே நடக்கட்டும் பார்ப்போம் என்று சொல்லப்படுமானால் செக்குமாடு சுற்றுவதுபோல் 10 வருடத்துக்கு ஒரு முறை பழய இடத்துக்கே அதாவது எங்கு தவறு செய்தோமோ அந்த இடத்திற்கே தான் திரும்பவும் திரும்பவும் வந்து கொண்டே இருக்கவேண்டுமே ஒழிய வேறு எவ்வித பலனையும் காண முடியாது என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

## ஈரோடு முனிசிபாலிட்டி.

---

ஈரோடு முனிசிபாலிட்டிக்கு இன்று நாமினேஷன் ஆஜர் செய்ததில் அடியில்கண்டபடி அபேட்சகர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்

போட்டியில்லாதவர்கள் தோழர்கள்:—

1. சேர்மன் ஷேக்தாவுத் சாயபு
2. S. R கண்ணம்மாள்
3. ஈ. வெ. இராமசாமி
4. M. சிக்கைய நாயக்கர்
5 பழனியப்ப கவுண்டர்
6. ரங்கசாமி பிள்ளை
7. வீரபத்திர செட்டியார்
8. மாரிமுத்து பண்டாரம்
9. கஸ்தூரிரங்கையங்கார்

ஆக ஒன்பது ஸ்தானங்கள் தவிர மற்ற 15 ஸ்தானங்களுக்கு 35 அபேட்சகர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அதாவது,

தோழர்கள்

2-வது வார்ட்.

1. A. K. மாரிமுத்து பிள்ளை
2. குப்புசாமி பிள்ளை
3. A. கொழந்தைவேலு பிள்ளை

4-வது வார்ட்.

4. K. அப்துல் ராஜாக் சாயபு
5. E S. கோவிந்தசாமி நாயுடு

5-வது வார்ட்.

6. S. K. S. காதர் சாயபு
7. J. B. மகமது சுல்தான சாயபு
8. K. அப்துல் சத்தார் சாயபு,
9 அப்துல் ரஜாக் சாயபு

6-வது வார்ட்.

10. B. ராமநாதன் செட்டியார்
11. C ரங்கராஜு செட்டியார்.

10-வது வார்ட். 2 ஸ்தானம்

12. E V. நஞ்சப்ப செட்டியார்
13. K கே. குதர்த்துல்லாசாயபு
14. E. P. வெங்கடாசலம்பிள்ளை
15. S K. ஷேக்தாவுத்
16. T. அங்கமுத்து பிள்ளை
17. S. மஸ்தான் சாயபு

11-வது வார்ட்.

18 M. அப்பய கவுண்டர்
19. M. சவுடப்பகவுண்டர்
20. V. வெங்கிடசாமி ரவுத்

12.வது வார்ட்

21. R. பாபு நாயுடு
22. S. Y. சுல்தான் சாயபு
23. ரூபின்டிக்காஸ்ட்டா
24. G. அர்புதசாமிபிள்ளை

14-வது வார்ட்

25. கோ ராமசாமிகவுண்டர்
26. C P. சின்னசாமிகவுண்டர்
27. பழனிசாமிகவுண்டர்

16-வது வார்ட்.

28. S.V.S. ராமலிங்கமுதலியார்
29. E. K. சாமியப்பன்

17 -வது வார்ட் 2 ஸ்தானம்.

30 Dr M. கிருஷ்ணசாமி
31. E.O.C. முத்துசாமிகவுண்டர்
32. சையத் அகமது சாயபு
33 ஆஜிவதூத் சாயபு
34. K. அப்துல் ரசாக்சாயபு

18-வது வார்ட்.

35. கேசவலால் சேட்
36. VVCR முருகேசமுதலியார்

19-வது வார்ட்,

37. S. குமாரசாமிக்கவுண்டர்,
38. MK முகமது சுல்தான்சாயபு
39. சையத் அகம்மது சாயபு

---

# திருமண அழைப்பு.

கோயமுத்தூர் தோழர் ரங்கராஜு அவர்கள் சகோதரி V. லக்ஷிமி அம்மாளுக்கும் தோழர் C. N. கிருஷ்ணசாமி அவர்களுக்கும் 22-9-34ந்தேதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கோயமுத்தூர் முனிசிபல் ஹைஸ்கூல் மண்டபத்தில் ஈரோடு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் திருமணம் என்னும் வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் நடைபெறும்.

தோழர்கள் யாவரும் திருமணத்திற்கு விஜயம் செய்து சாக்ஷியளித்து கௌரவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். பல தோழர்கள் திருமணம் என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார்கள் என்று கோவை தோழர் M. சங்கரலிங்கம் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

## இரணியன் நாடகத்தில்

# தோழர் ஈ. வெ. ரா.

## சொற்பொழிவு.

தோழர்களே!

சென்னை சீர்திருத்த நாடக சங்கத்தாரால் நடிக்கப்பட்ட இந்த முதல் நாடகத்துக்கு தலைமை வகிக்கும் பெருமை எனக்களித்ததற்கு நன்றி செலுத்துகிறேன்.

நாடகம் என்பது ஒரு விஷயத்தை தத் ரூபமாய் நடித்துக் காட்டுவது என்பதோடு அதைப் பெரிதும் மக்களின் நடத்தைக்கு வழி காட்டியாகவும், ஒழுக்கங்கள் கற்பிக்கப்படுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது என்று சொல்லப் படுகின்றது.

ஆனால் அது அந்தப்படி தத் ரூபமாய் நடத்திக் காட்டப்படுவதும் இல்லை. மக்கள் ஒழுக்கத்துக்கும், நடப்புக்கும் வழிகாட்டியாய் நடப்பிப்பதும் இல்லை என்று சொல்வதற்கு நாடக அபிமானிகள் மன்னிக்க வேண்டுகிறேன்-

தத் ரூபம் என்பதில் விஷயங்களின் ரசபாவங்களும் உண்மையாய் நடந்திருக்கும் என்று நினைக்கும்படியான எண்ணமும் ஜனங்களுக்கு விளங்க வேண்டும்.

அந்தப்படி இல்லாமல் நமது நாடகங்கள் பெரிதும் சங்கீதக்கச்சேரி போலவும், கால க்ஷேப சபை போலவும், விகடசபை போலவும் நகைகள் உடுப்புகள், காக்ஷி சாலைகள் போலவும் விஷயங்களுக்குப் பொருத்தமில்லாத பேச்சுகளை அடுக்கி பேசும் பேச்சு வாதசபைபோலவும் விளங்குகின்றது என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

நாடகங்களுக்கு நடிப்புகளில் மிக விசேஷ சமயங்களில் அல்லது அசல் விஷயத்திலேயே பாட்டு வரும் சந்தர்ப்பங்களில் தவிர மற்ற சமயங்களில் பாட்டுகள் பொருத்தமற்றது என்பது நமது அபிப்பிராயம்.

உதாரணமாக நெருப்பு பிடித்து விட்ட சமயத்தைக் காட்ட நடிக்க வேண்டியவர் தடபுடலாய் ஆத்திரப்பட்டு குளருபடியாய் இருப்பது போல் நடிக்க வேண்டுமா? அல்லது தாளம், சுதி, ராகம் முதலியவைகளைக் கவனித்து சங்கீத லட்சியத்தில் திரும்பி ஜனங்களுடைய கவனத்தையும் சங்கீதத்தில் திரும்ப விட்டு விட்டால் நடிப்பு சரியானதாக இருக்க முடியுமா என்று கேட்கின்றேன். அது போலவே நடிப்புக்குப் பொருத்த மற்ற உடை, நடை, நகை முதலியவைகளுடன் விளங்கினால் விஷயம்நடந்ததாக தத்ரூபமாய் கருதப்பட முடியுமா?

மேல் நாடுகளில் ரசபாவங்களுக்காகவும், தத்ரூபமாய் நடந்ததாகக் காட்டப்படும் நடப்புக்காகவும் நடத்தப்படும் ட்ருமாக்களில் பாட்டு என்பதே மிக மிக அருமையாய்த் தான் இருக்கும். சங்கீதத்துக்காக நடக்கும் விஷயத்தை அங்கு ஆப்ரா என்று சொல்லப்படுமே தவிர ட்ருமா என்று சொல்லமாட்டார்கள். இங்கு சங்கீத வித்வான்களே நாடகமேடையைக் கைப் பற்றிக் கொண்டதானது நாடகக் கலையைச் சங்கீதம் அழித்து விட்டது என்றும், மக்களது நாடகாபிமானமும் சங்கீதத்தில் திருப்பப்பட்டு விட்டது என்றும்தான் கருத வேண்டும்.

நாடகம் நடிக்கப்படும் கதைகள் விஷயமும் தற்கால உணர்ச்சிக்கும், தேவைக்கும், சீர்திருத்த முறைக்கும் ஏற்றதாயில்லாமல் பழமையைப்பிரசாரம் செய்யவும், மூட நம்பிக்கை வர்ணாச்சிரமம் ஜாதி வித்தியாச உயர்வுதாழ்வு, பெண் அடிமை, பணக்காரத்தன்மை முதலிய விஷயங்களைப்பலப்படுத்தவும், அவைகளைப் பாதுகாக்கவும் தான் நடிக்கப்படுகின்றதேஒழிய வேறில்லை. அரிச்சந்திரன் கதை, நந்தனர் கதை முதலாகியவற்றை எடுத்துக்கொள்ளுங்கள். அரிச்சந்திரன் கதையில் சத்தியம் பிரதானம் என்று சொல்லப்பட்டாலும், சத்திய அசத்தியவிஷயம் நடக்காமல் கதையில் அலட்சியமாய் இருக்கிறது. ஜாதி வித்தியாசம் தீண்டாமை, பெண் அடிமை, பார்ப்பன ஆதிக்கம், பணக்காரத்தன்மை எஜமானத்தன்மை ஆகியவைகள் தான் தலைதூக்கி இருக்கிறது. அது போல வேநந்தன் கதையிலும், ஆள் நெருப்பில் விழுந்துவெந்து போனதுதான் மிளிர்கின்றதே தவிர உயிருடன் தீண்டாமை ஒழிக்கப்பட்டதாக இல்லவே இல்லை. ராமாயணமும் சீதையை படுத்தினபாடு பெண் ஒரு சொத்துபோல் பாவிக்கப்படுகிறதும் விளங்கும்

இப்படிப்பட்டகதைகள் ஒழிக்கப்படவேண்டும். சுயமரியாதையும், சீர்திருத்த வேட்கையுமுள்ளவர்கள் அதை நடிக்கக்கூடாது.

இரணியன் கதையில் வீர ரசம் சூட்சித்திரம், சுயமரியாதை ஆகியவைகள் விளங்கினதோடு பகுத்தறிவுக்கு நல்ல உணவாகவும்,இருந்தது. ஆனால் சில விஷயங்களில் தலைகீழ் மாறுதலாகவும், கடின வார்த்தையாகவும் காணலாம். சீர்திருத்த நாடகம் என்றாலே மாறுதல் இருந்துதான் தீரும். மாறுதலுக்கு அவசியமானதும் பதிலுக்கு பதிலானதுமான வார்த்தைகள் இருந்தால் தான் பழமை மாற சந்தர்ப்பம் ஏற்படும் அப்படிக்கில்லாமல் இருந்தால் தகுந்த மாறுதல்ஏற்பட இடமிருக்காது. ஆரியப் புராணங்களில் ஆரியர்களல்லாதவர்களை குரங்கு, அசுரன் ராக்ஷதன், சண்டாளன், பறையன் என்பன போன்ற வார்த்தைகளையும் அது உபயோகிக்கும் முறையையும் பழக்கத்தில் இருந்துவரும் மாதிரியையும் பார்த்தால் இந்த சரித்திரம் படிப்பதில் அவசியமான மாறுதல் ஏற்பட உதவி செய்யுமாஎன்பது சந்தேகந் தான்.

நிற்க இச்சரித்திரம் உண்டாக்கிய தோழர்புதுவை பாரதி தாசனை நாம் போற்றிப் பாராட்ட வேண்டும். அவர் உணர்ச்சியுடன் உண்டாக்கி இருக்கினார். இன்னமும் இதுபோல் பல நாடகங்கள் உற்பத்தி செய்யவேணடும். பாத்திரங்களுக்குகற்பித்த தஞ்சை தோழர் டி. என். நடராஜன் அவர்களின் ஆசிரியத் தன்மை மிகவும் போற்றத்தக்கது. அவர் 20 வருஷமாய் பொதுநல சேவையில் இருந்துவருகிறவர், ஜெயிலுக்கும் சென்றவர். அவர்கள் இருவருக்கும் இந்த இரண்டு பதக்கங்களை சீர்திருத்த நாடக சங்கத்தார் சார்பாய் சூட்டுகிறேன்.

நாடகத்துக்கு உதவி செய்த தோழர்கள் சி. டி. நாயகம், என். எஸ்.ஆனந்தம், அழகப்பா முதலியவர்களுக்கும் நன்றிகூறுகிறேன். சிறப்பாக தோழர் மாசிலாமணி முதலியவர்கள் இந் நாடகத்துக்கு விளம்பரம் அச்சுவேலை, காகிதம் முதலிய விஷயங்களில் திரேகப் பிரயாசை, பொருள் செலவு முதலியவைகள் செய்ததுடன், இவ்வளவு சிறப்புக்குக் காரணமாய் இருந்ததாகவும் கேட்டு மிகவும் மகிழ்வதோடும் அவரையும் பாராட்டி நன்றி செலுத்துகிறேன்.

இந்த புதிய நாடகத்துக்கு இவ்வளவு தோழர்கள்விஜயம் செய்துகௌரவித்ததற்கும், நாடக பாத்திரர்களுக்கும் சபையாருக்கும் ஊக்கமளித்ததற்கும்நான்நன்றிசெலுத்துகிறேன்.

---

## தொம்பக் குளத்தில் சுயமரியாதைத் திருமணம்.

---

### தோழர் அ பொன்னம்பலனர் பிரசங்கம்.

தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் சென்னையிலிருந்து 9-9-34 இரவு 7-30 மணிக்கு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் புறப்பட்டு 10-9-34 காலை 10-30 மணிக்கு ஸ்ரீ வில்லிபுத்தூர் வந்து சேர்ந்தார் இவ்வூர் சுயமரியாதைச் சங்கத் தோழர்கள் வரவேற்று ரயில்வேஸ்டேஷனிலிருந்து சங்கத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு சாப்பாட்டிற்குப் பிறகு ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து தொம்பக் குளத்திற்கு மாட்டுவண்டியில் பயணமானார்கள். இவ்வூர் சுமார் 10 மைலிருக்கும்.

### தொம்பக்குளம் சுயமரியாதைத் திருமணம்.

தோழர்கள் யாவரும் தொம்பக்குளம் சென்றதும் அவ்வூர் தோழர்கள் நன்கு வரவேற்று மலர் மாலை சூட்டி பாண்டு வாத்தியத்துடன் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். மணமக்கள் வீட்டிற்கு ஊர்வலம் போய்ச் சேர்ந்ததும், எல்லோருக்கும் சந்தனம் தாம்பூலம் வழங்கினார்கள். இத் திருமண நிகழ்ச்சிக்குப் பெருந்திரளான ஆண்களும் பெண்களும் விஜயஞ் செய்திருந்தார்கள்.

ஸ்ரீ வில்லிபுத்தூர், ராஜபாளையம் மகாராஜபுரம், சேத்தூர், நாச்சியார்பட்டி, பிள்ளையார்குளம், கருசல் குளம்; மகம்மது சாகிப்புரம், அனத்தகலப்பட்டி, சென்னல் குளம் பண்டிதன் பட்டி, சிவகாசி முதலிய பல வூர்களிலுமிருந்தும் தோழர்கள் வந்திருந்தார்கள், அவற்றுள் முக்கியமான தோழர்கள் வருமாறு:—எ. டி. நாயகம், மா. ராமசாமி, டி. சங்கரய்யா, எஸ். கே. முத்துச்சாமி, பி. பி. சின்னப்பா, எஸ். அழகர்சாமி, வேலாயுதம், அம்மையப்பன், தி. சண்முகநாதன், சிங்காரவேலு, சக்கரய்யப்ப நாடார், துரைராஜ், ஈா. வெங்கிடசாமி, பி. சங்கரலிங்கம், என். எஸ். பீர் முகம்மது, கருப்பையா, தி. ந. பெரிய கூடலிங்கம், ஞா. பி. ஞானதேசிகம், அ. பொன்னம்பலம், ஆகியவர்களாகும். இத்திருமண நிகழ்ச்சி 10-9-34மாலை 5மணிக்கு தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள்தலைமையில்தொம்பக்குளம் தோழர் பெருமாள் அவர்கட்கும் தோழர் கிருஷ்ணம்மாள் அவர்கட்கும் (விஸ்வகர்ம வகுப்பினர்) திருமண ஒப்பந்தம் நடைபெற்று மலர் மாலை சூட்டிக்கொண்டார்கள். தோழர் அ.பொன்னம்பலம் அவர்கள்"சுயமரியாதைத்திருமணம்" என்பது பற்றி விரிவுரை நிகழ்த்தினார். பின்னர் நன்றி கூறியபின் திருமண நிகழ்ச்சி இனிதுமுடிந்தது.

### பொதுக்கூட்டம்.

இரவு 9 மணிக்கு இவ்வூர் தோழர் நாராயணசாமி (நாயக்கர்) அவர்களுடைய தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் ஆண்களும் பெண்களும் பெருந்திரளாக விஜயஞ் செய்திருந்தார்கள். தோழர் குப்புச்சாமி அவர்கள் புதல்வர் சமதர்ம கீதங்கள் பாடினார்கள். தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் "சுயமரியாதை இயக்கம்" என்பது பற்றி 2 மணி வரை பேசினார்கள் தலைவர் முடிவுரையுடன் தோழர் எ. டி. நாயகம் அவர்கள் நன்றி கூற கூட்டம் 11-30 மணிக்கு இனிது முடிவடைந்தது.

தொம்பக்குளத்திலிருந்து 11-9-34 காலை 10 மணிக்கு நாச்சியார் பட்டிக்கு தோழர்கள் அ, பொன்னம்பலம் ஞா. பி. ஞானதேசிகம் முதலியவர்கள் பயணமானார்கள். அங்கு தோழர்கள் ரா. நாராயணசாமி உத்தமபாளையம் "பாரதி ஆசிரியர்" கா. வெ. நாராயணசாமி, நா. கி. கோபால்சாமி முதலியவர்களைக்கண்டு கலந்து பேசிவிட்டு தோழர் நா. கி. கோபால்சாமி அவர்கள் இல்லத்தில் உணவு அருந்தி மாலை 3 மணிக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் புறப்பட்டார்கள். தோழர் அ. பொன்னம்பலம் இரவு 8 மணிக்கு பயணமானார்-

## மதங்களால் விளைந்த பயன்.

(சென்னை K. கலியாணசுந்திரம்)

இன்றைய இருபதாம் நூற்றாண்டிலும் நம் நாடாகிய இந்தியா தேசம் அடிமை தேசமாகவும், வறுமை தேசமாகவும் இருப்பதோடு மனிதனுக்கு மனிதன் பிறிவுற்று இருப்பதற்கு முக்கிய காரணங்களில் மதம் என்பது ஒன்றுஎன்பதே நமது அபிப்பிராயம். தோழர் காரல் மார்க்ஸ் (Religion is theopium foi the people) மதம் மக்களுக்கு அபின் என்று உரைத்திருக்கிறார். அவரது பொன்போன்ற மொழியில் ஒரு கடுகளவேனும், பண்டைய காலங்களிலும் சரி, இந்தக் காலங்களிலும் சரி பிசகில்லை என்பது எனது அபிப்பிராயம். நம் தேசம் முன்னுக்கு வரவேண்டுமாயின் மதுவை உட்கொள்ளும் வழக்கத்தை அப் பழக்கம் உள்ளவர்கள் ஒழிக்க வேண்டுமென்று உலகம் போற்றும் உத்தமர்கள் யாவரும் உரைப்பதில் யாதொரு பிழையும் இல்லை. மதுவை உட்கொள்பவன் எப்படி மதுவை உட்கொண்டபின், மது என்னும் மயக்கம் மண்டைக்கு ஏறி, நியாயம் அல்ல என்று தான் மதுவை உட்கொள்வதற்கு முன் நினைத்ததை அனைத்தையும் செய்கிறானோ, அதுபோலவே இன்று நமது தேசத்தில் மதம் என்பதும் மக்களுக்கு அபின் (மயக்கத்தைக் கொடுக்கக் கூடியது) போன்று இருக்கிறது. நமது தேசத்தில், இந்து மதம், அதில் சைவ மதம், வைஷ்ணவ மதம், வைணவரில் தென்கலை, வடகலை, முகமதிய மதம் அதில் சுன்னி, சியார், கிருஸ்த்தவ மதம் அதில் கத்தோலிக்கர், புராட்டஸ்டண்ட், பௌத்தமதம், ஜைன மதம், சமண மதம் என கணக்கற்ற மதங்கள் இருக்கின்றன, ஒரு மதத்திற்கும், இன்னொரு மதத்திற்கும் தன் கொள்கைகளில் முரண்பாடுகள் இருக்கின்றன. ஆதலால் ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் மதம், தங்கள் கொள்கைகள் தான் எல்லா மதங்களை விடவும், எல்லாமதக்கொள்கைகளை விடவும் சிறந்தது என்று போற்றுவதோடல்லாது அவரவர்கள் தங்கள் தங்கள் மதத்திற்காக உயிரை அர்ப்பணம் செய்யவும் பிறமதத்தினரை இம்சை செய்யவும், தயாராய் இருக்கின்றதோடல்லாமல் பண்டைய காலங்களிலும் அவ்வாறே செய்தனர். உதாரணமாக் முகமதியமதத்தைசேர்ந்த அரசர்கள் தங்களது மதத்தின் மேல் இருந்த அன்பினாலும்நம்பிக்கையினாலும், மற்றவர்களை இம்சித்ததாகவும் இந்துக்களில், சைவர்கள் தங்கள் மதத்தின் பேரில் இருந்த அன்பும், நம்பிக்கையும் காரணமாக சமணர்களைக் கழுவேற்றினதாகவும், ஏசுகிருஸ்துவுக்கு விரோதமான மதத்தினர் ஏசுவை இம்சித்து சிலுவையில் அடித்ததாகவும் 1572ம் வருடம் ஆல்பிஜென்ஸுவில் என்றவரை அழித்த குற்றத்திற்காக பதினாயிரம் புராட்டஸ்டாண்டு மதத்தினரைக் கொலை புரிந்ததாகவும் நான்காவது ஹென்றி, ஆரஞ்சு வில்லியம் என்பவரையும் மத வெறியர்களே கொலை செய்ததாகவும் 1842ம் வருடம் "ஜியார்ஜ் ஜேக்கப் ஹோலியோக்" என்னும் மதாச்சாரி யார்கடவுள் இருத்தலால் யாருக்கும் யாதொரு சிறையபயனும் விளையாதிருப்பதால்தன் போன்ற குருக்களுக்கு அரைச் சம்பளம் கொடுத்தால் போதும் என்று அபிப்பிராயப்பட்ட குற்றத்திற்காக அவர் சிறையில் அடைக்கப்பட்டதாகவும் "அறிவின் காலம்" என்று "தாமஸ் பெயின்" எழுதிய புத்தகத்தை "ரீச்சார்டுகார்லைல்" விற்றகுற்றத்திற்காக அவருக்கு ஒன்பதாண்டு தண்டனை கொடுக்கப்பட்டதாகவும் மீண்டும் ஆராயுங்கால் தந்திகளையும், இரயிலையும் முதல் முதலில் கொண்டு வரும்போது மத பிரசாரர்கள் அதை கிறிஸ்துவின் பகைவன் வருவதைக் காட்டும் தீய சகுனம் என்று கூறி எதிர்த்ததாகவும் ஒரு சமயத்தில் விருந்தாளிகளுக்கு விரத தினத்தில் புலால் சமைத்துப்போட்ட குற்றத்திற்கு தண்டனையாக ரயில் ஏற்பட்டது என்று பிரான்சு தேசத்து ஆர்ச்பிஷப் கூறினதாகவும் 1814ம் வருடம் லண்டனில் காஸ் (Gas) (ஆவி) மூலமாக விளக்கேற்ற முயன்றபோது மத பித்தர்கள் அதைமதவிரோதமானதுஎன்று எதிர்த்ததாகவும், பதினெட்டாம் நூற்றாண்டில் நிறைவேறிய "வாழ்க்கை இன்ஷ்யூரன்ஸ் (Life insurance) ஐ மத பித்தர்கள் அதற்கு முன் கடவுள் சித்தத்திற்கும் மதத்திற்கும் விரோதம் என்று சொல்லி வெறுத்ததாகவும் அறிகிறோம். மீண்டும் ஆராயுங்கால் சமீபத்தில் (Birth control) அளவுக்கு மேல் குழந்தைகளை உற்பத்தி செய்யாமல் தடுக்க சர்க்கார் செய்த சட்டத்தை ரோமன் கத்தோலிக்க மதத்தினர் அது கடவுளுக்கு விரோதமானதென்றும், குழந்தைகளை விர்த்திசெய்யத்தான் ஆண்களையும், பெண்களையும் கடவுள் உண்டாக்கினார் என்றும் சொல்லி எதிர்த்தற்கு (ஆண்களையும், பெண்களையும்; குழந்தைகளை உண்டாக்கத்தான் பிறப்பித்தார் என்றால் இவர்களில் ஏன் பாதிரிகள் விவாகம் செய்து கொள்வதில்லை. சில யௌவன பெண்களை கல்யாணம் செய்து கொடுக்காமல் கன்னிப் பெண்களாகவேமடங்களில் வைத்துக்கொண்டிருக்கின்றன.) சரித்திரங்களும், பிரத்தியச்ச அனுபவங்களும் எவ்வளவோ இருந்து வருகின்றன.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஆதாரமான மதம் மக்களை சமாதானமாக வாழச் சம்மதிக்குமா என்பதை யோசித்தால் மதம் மக்களுக்கு அபின் என்பது தெற்றென விளங்கும்.

இந் நிலையில் நமது தேசத்தில் சமாதானம் நிலவ வேண்டுமானால், மனித சமூகம் சகோதரத் தன்மை அடைய வேண்டுமானால் நமது தேசத்தில் உள்ள மக்கள்கள் யாவரும் ஒரே மதத்தைச் சார்ந்தவர்களாகவாவது இருத்தல் வேண்டும். அல்லது எம்மதத்தையும் சாராது, இந்தியா தேசத்தில் பிறந்தவர் யாவரும் இந்தியர்கள் என்று அழைத்துக் கொள்ள வேண்டும். மேற்சொன்ன இரண்டில் ஒன்றை பின் பற்றினால் அல்லது நமது தேசம் சண்டையின்றி, பிரிவின்றி சமாதானமாய் சுதந்தரமாய், இன்பமாய் வாழ முடியாது.

---

(8ம் பக்கத்தொடர்ச்சி)

லான்சி என்பவரும் புருதான் என்பவரும் புரட்சிக்காக சங்கங்களையும் கூட்டங்களையும் ஏற்படுத்த ஆரம்பித்தார்கள். பிலான்சி என்பவா தன்னுடைய வயது காலமெல்லாம் ஜெயிலில் இருந்தார். வெளியே வந்தவுடன் தன் வேலையை ஆரம்பிப்பதும் உடனே ஜெயிலுக்கு போவதும் தான் அவருடைய வேலை. அவருடைய சங்கம்தான் சமதர்ம சரித்திரத்தில் மிகவும் பலமான சங்கம். 1871 வருஷத்தில் ஏற்பட்ட பாரிஸ் கம்யூனுக்கு அவர் தான் முக்கிய காரணஸ்திரீ.

பாரிஸ் கம்யூனைப்பற்றி நாம் அடுத்த கட்டுரையில் எழுதுவோம்.

("வெற்றி முரசு")

---

(9ம் பக்கத்தொடர்ச்சி)

யனைக் கொன்றுவிட்டு சேனாபதியையே சக்ரவர்த்தி யாக்குவதாகவும் கூறி மயக்குகிறாள், அவள் அழகில் சிக்குண்ட சேனாதிபதியும் சதிக்கு உடன்படுகிறான். ஆரியர் மந்திர சக்தி பிரமாதமென்பதைக் காட்டப்பொய்க் கதைகளையும் கட்டி பிரகலாதனை நம்பச்செய்து அவனை ஆரிய மதக்காரனாக ஆக்கிவிட்டார்கள். இவற்றையறியாத இரணியன் கடைசியில் பிரகலாதனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட பிரகலாதனிடம் யோசிக்கும்போது, பிரகலாதன் ஆரியர் உயர்வைச் சொல்கிறான். இரணியன் ஆத்திரமடைந்து ஆரியக் கடவுளான "நாராயணன் எங்கிருக்கிறார்?" என்கிறார். உடனே தூணைக் காட்ட அதற்கு மறைவில் சிங்கமுகத்துடன் முன்னமே ஏற்பாடு செய்திருந்தபடி ஒளிந்திருந்த ஒரு ஆரியரும், மறைந்திருந்த சில ஆரியரும் சேர்ந்து இரணியனைக் கொன்று விடுகிறார்கள். பிறகு பிரகலாதனையும் கொன்றுவிடுகிறார்கள். சேனாதிபதி உண்மையறிந்து வருந்தி பாதகியையும் சில ஆரியர்களையும் கொன்றுவிட்டு உண்மையைக் குடிகளுக்கு விளக்கிவிட்டுத் தற்கொலைசெய்து கொள்ளுகிறார். இதுவே 9-9-34-ம் தேதி நடந்த நாடகத்தின் சுருக்கம்.

மத்தியில் சீர்திருத்த நாடகம் நடத்த வேண்டியதின் அவசியத்தை குறித்து தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் பேசியதோடு, (உபன்யாசம் 13ம் பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.) இந்நாடகத்தை இயற்றித் தந்த புதுவை தோழர் பாரதிதாஸனுக்கும், நடிகர்களுக்குப் பயிற்சியளித்த தோழர் டி. என். நடராஜ பிள்ளைக்கும் தங்கப்பதக்கங்கள் வழங்கினார்.

நாடக பாத்திரர்கள் அதிலும் முக்கியமாக, இரணியனாக வந்த தோழர் எஸ். குருசாமியும், சேனாதிபதியாக வந்த தோழர் ரங்கநாதமும் மற்றும் கெ. எம். பாலசுப்பிரமணியம், அருணகிரி, அழகப்பா, முத்து முதலியோர் நடித்த காட்சியின் சிறப்பு குறிப்பிடத்தக்கதாகும். இந்நாடகத்தைக் கண்டவர்கள் யாவரும் நடிகர்களை வியந்தனர்.

---

## சென்னை சட்ட சபை.

### தோழர் சந்தனக்கவுண்டர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தஞ்சை, திருச்சி, மதுரை ஜில்லா இந்தியக்கிறிஸ்துவத் தொகுதித் தேர்தலுக்காக நாமினேஷன்கள் தாக்கல் செய்திருந்த 4 அபேட்சகர்களில் 3 அபேட்சகர்கள் நிற்பதிலிருந்து வாபஸ் வாங்கிக்கொண்டு விட்டபடியால் திண்டுக்கல் தோழர் சந்தனக் கவுண்டர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

---

பாரிஸ் கோல்டு நகைகள்.

இது அசல் சவரன் பொன் நகைகளைப்போலவே நெடுநாள் கருக்காமல் இருப்பதுடன் மிகவும் வேலைப்பாடு உள்ளது. இதுவேதான் நீங்கள் ஜதை 3ரூ-4ரூ கொடுத்துவாங்கியது. இந்த நகைகளை நாங்களே தயார்செய்வதால் மிக குறைந்த விலைக்கு கொடுக்கிறோம். வளையல் ஜதை 1க்கு 2-4-0 கொலுசு ஜதை 1க்கு 3-8-0 செயின் அட்டிகை 1க்கு 3-8-0 இரட்டைவடம் கோகர் ஜான் செயின் 8-8-0 முத்து பவளம் கட்டும் கம்பி தோலா 1க்கு 1-4-0 சர்ட்பட்டன்ஸ் டஜன் 1க்கு 1-0-0 5ரூ. மேல்பட்ட ஆர்டருக்கு தபால் சார்ஜ்இனாம். 10-20ரூபாய் ஆர்டர்களுக்கு முறையே 1அணா 2அணாவீதம் கமிஷன் கொடுக்கப்படும். மொத்த வியாபாரிகள்தேவை.

ஆர். கே. சாமி & சன்ஸ்,
63 தெலுங்குவீதி, கோயமுத்தூர்.

# தூத்துக்குடியில் தோழர் ராஜகோபாலாச்சாரியார்.

## கேள்விகளும், பதில்களும்.

சென்ற 6—9—34 வியாழக்கிழமை 1-15 மணிக்கு தோழர் சி. இராஜகோபாலாச்சாரியாரும், தோழர்குமாரசாமிராஜாவும் இந்நகருக்கு வந்தார்கள். அன்று இரவு 7 மணிக்கு மேலூர் திருஞான சம்பந்தர் மடத்திற்குப் பக்கத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் இவ்வூர் சுயமரியாதைத் தோழர்கள் எழுத்து மூலமாக சில கேள்விகளுக்கு தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களைக் கூட்டத்தில் வைத்து பதிலுரைக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அதற்கு தோழர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அளித்த பதில் பின் வருமாறு:—

1. கேள்வி:— சுமார் 35 கோடி ஜனத்தொகையுள்ள நம் இந்தியா தேசத்தில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் எத்தனை பேர்?

பதில்:— சில ஆயிரக்கணக்கான பேர். ஆனால் அதை ஆதரிக்கின்றவர்கள் அநேகர்.

2. கேள்வி:— உடல் நலம், பொருள் நலம் பேணாது பன்முறை சிறைசென்ற தேச பக்தர்களை ஏன் தேசத்துரோகிகள் என்று சொல்லவேண்டும்?

பதில்:— தேசத்துரோகிகள் என்று நாங்கள் சொல்லவில்லை. அப்படிச் சொன்னாலும் அது தவறு.

3. கேள்வி:— பார்லிமெண்டரி முறைப்படி நம் இந்தியாசட்டசபையில் இதுவரையும் இருந்து வரும் தலைவர்களுக்குத்தேர்தலில் போட்டியில்லாமல் இருந்துவந்திருக்கத் தாங்கள் சர். ஆர். கே. ஷண்முகம் அவர்களுக்கு ஏன் போட்டியாக ஒரு அபேட்சகரை நிறுத்தவேண்டும்?

பதில்:— சர். ஆர். கே. ஷண்முகம் அவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் காலத்தில் காங்கிரஸ் மெம்பர்கள் அங்கில்லை.

4. கேள்வி:— ஏழையில் தொழிலாளர், பப்பாய் சம்பளக் குறைப்புத் திட்டம் வந்தவுடன் வேலை நிறுத்தம செய்து தடியடி, மரணம் முதலியவை அடைந்தவர்களுக்கும, 80 ஆயிரம் பேர் வேலையில்லாமல் போய்வாடி, தயங்கி அல்லோலப்படும்போதும் காங்கிரஸ் கமிட்டிக்கூட்டம் நடைபெற்ற சமயம் அநுதாபத் தீர்மானம் போடாத காரணம் என்ன?

பதில்:— ஏழையில்தொழிலாளிகளுக்கு நாங்கள் செய்த உபகாரத்தை அவர்களிடம் கேட்டால் தெரியவரும்.

5. மகாத்மா காந்தி ஹரிஜன பிரசாரம் செய்துவரும் பொழுது தீண்டாமைக்கு இந்து சாஸ்திரத்தில் ஆதாரமில்லையென்று சொன்னரே. அதை அநுசரித்து தாங்கள் இந்திய சட்டசபை மெம்பர்களைக் கண்டு பேசி தீண்டாமை விலக்கு மசோதாவையும், ஆலயப் பிரவேச மசோதாவையும் சட்டசபைக்குக் கொண்டுவரும்படி செய்துமசோதா விவாதத்திற்கு வருமுன்னால் தாங்கள் மெம்பர்களுக்குச் சுற்றறிக்கை விட்டதின் மார்மமென்ன?

பதில்:— சட்டசபை அங்கத்தினர்களைக் கண்டு பேசி தீண்டாமைவிலக்கு மசோதாவையும், ஆலயப்பிரவேச மசோதாவையும் சட்டசபைக்குக் கொண்டுவரச்சொன்னேன். ஆனால் சட்டசபை கலையப்படும் சமயத்தில் ஏதாவதொரு மசோதா சட்டமாக்க வந்தால் அரைகுறை விவாதத்தில் இருந்தாலும் அதோடு அந்த மசோதா ரத்துச் செய்யப்படும் எனும் நோக்கத்தினல் சுற்றறிக்கை விட்டேன்.

6. கேள்வி:— இந்நகர் சுயமரியாதைத் தோழர்கள் காங்கிரசில் அங்கத்தினர்களாகச் சேர்ந்ததற்கு மாஜி காங்கிரஸ் காரியதரிசி பெ. கந்தசாமி பிள்ளை துண்டுப் பிரசுரம் மூலம் தம் பதவியை ராஜிநாமாச் செய்ததைத் தாங்கள் அறிவீர்களா? அது காங்கிரசின் பயங்கொள்ளித்தனத்தைக் காட்டுகிறதா? இல்லையா? சுயமரியாதைக்காரர்கள் காங்கிரசில் சேரலாமா?

பதில்:— காங்கிரஸ் அங்கத்தினர் ரசீதில் கையெழுத்திட்டவர்கள் யாபேரும் அங்கத்தினராகச் சேரலாம். அதற்காக அவர் ராஜிநாமாச் செய்தது அவர் குற்றமே.

7. கேள்வி:— ஈரோட்டில் சுயமரியாதை இயக்கத் தலைவர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களைக்கண்டு பேசியதின் நோக்கம் என்ன?

பதில்:—அது எங்கள் இருவரின் அந்தரங்க விஷயம்

8. கேள்வி:— சமதர்மக்கொள்கையைப்பற்றி தங்கள் கருத்தென்ன?

பதில்:—இல்லை.

9. கேள்வி:—தேசத்திற்காக அருந்தொண்டாற்றிப் பன்முறை சிறைசென்ற டாக்டர் பி. வரதராஜுலு அவர்களுக்குப் போட்டியாக இந்திய சட்டசபைத் தேர்தலுக்கு தோழர் அவனாசிலிங்கம் செட்டியாரை நிறுத்தவேண்டிய காரணமென்ன?

பதில்:—நான் டாக்டர் வரதராஜுலு நாயுடுவை நேரில்கண்டு 4 அணா கொடுத்து மெம்பராகச் சேரும்படி எவ்வளவோ வற்புறுத்தினேன். அதற்கு அவர் இணங்காததினால், காங்கிரஸ் அங்கத்தினராகாமல் தேர்தலுக்கு நிற்கும் எவருக்கும் காங்கிரஸ் கொள்கைப்படி போட்டியாகக் காங்கிரஸ் அங்கத்தினரை நிறுத்த வேண்டுமென்று நிறுத்தினோம்.

10. கேள்வி:— டாக்டர் பி. வரதராஜுலுவைவிட தோழர் அவனாசிலிங்கம் செட்டியார் தேசத்திற்காகச் செய்ததொண்டு என்ன?

பதில்:—இல்லை.

11. கேள்வி:— ஹரிஜன நிதிக்காக சேர்ந்த ரூபாய் 8 லக்ஷத்தின் கதியென்ன? அதை எவ்வகையில் செலவிட உத்தேசம்? ஷை ரூபாயைத் தேர்தல் விஷயத்துக்காகச் செலவு செய்யப்போவதாக வருகிற வதந்தி மெய்தானா?

பதில்:—முன் பகுதி கேள்விக்குப்பதில் இல்லை. ஷை வதந்தி பொய்யான காரியம். ஷை வதந்தி இந்நகரிலிருந்துதான் கிளம்பியிருக்கிறது.

12. தங்களின் எதிர்கால நோக்கமென்ன?

பதில்:—இல்லை.

---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யன் பேசுவதைக்கண்டு வியப்புற்று "நீ ஊமையாயிற்றே! இப்பொழுது பேசும் வல்லமையை எப்படிப் பெற்றாய்?" என்று கேட்டாள்- அதற்கு மெசட்டோ", தான் ஓர் வியாதியின் காரணமாக ஊமையாயிருந்ததாயும் அப்பொழுது திடீரென்று அவ்வியாதி குணமாகி விட்டதாயும் சொன்னான். பிறகு தலைவி ஒன்பது பெண்ணும், ஒரு ஆணும், என்று சொன்னதை விளக்கும்படி கேட்டாள். அவனும் உண்மையை உரைத்தான். தன்னைப்போலவே மற்ற கன்னிமார்களும் நடந்து கொண்டதை யறிந்து தன்னுடைய நடத்தையும் சீக்கிரம் வெளியாகி விடுமென்று கருதி பிறர் சந்தேகிக்காதபடி காரணங்களைக் காட்டி அவ்வருமையான தோட்டக்காரனை அம்மடத்திலேயே வைத்திருக்க நிச்சயித்தாள். அதே சமயத்தில் அம்மடத்தின் காரியஸ்தன் வயோதிகத்தின் காரணமாக உயிர் நீத்தான். அம்மடத்திலிருந்த ஒன்பது கன்னிகா ஸ்தீரீகளும் ஏகமாகக் கலந்து ஆலோசித்து மெசட்டோவை பொதுவுடைமையாக்கிக் கொண்டனர். தங்களுடைய பிரார்த்தனைகளாலும், கடவுளருளாலும் அவ்வூமை வியக்கத் தக்க விதமாய் பேசும் சக்தியை அடைந்தான் என்று வெளியே பிரஸ்தாபித்தார்கள். மேலும் மேலும் அம்மடத்தில் கன்னிகைகளின் தொகை விருத்தியான போதிலும் அவர்களுக்குள் யாதொரு சச்சரவும் ஏற்படாமல் நடந்து கொண்டனர். பின் தலைவியும் இறந்தாள். மெசட்டோவுக்கும் வயதாய் விட்டபடியால் அவன் தன் ஊருக்குப் புறப்பட்டான். அப்பொழுது கன்னிகா ஸ்திரீகள் ஒவ்வொருவரும் அவனுக்குப் பணங் கொடுத்தனர். கோடரியுடனும், மண்வெட்டியுடனும் புறப்பட்ட மெசட்டோ பை நிறையப்பணத்துடன் ஊரடைந்தான். இவனுக்கு கன்னிகா ஸ்திரிகளின் மூலியமாய் ஏற்பட்ட குழந்தைகளை வளர்க்கும பொறுப்பு இல்லாதிருந்த போதிலும் தன்னுடைய குழந்தைகள் அனைவரும் தன்னை அழைக்கப்படலாயிற்றே என்று எங்கினான். இது இயற்கை தானே! யாருக்குத்தான் இராது!!

மொட்டைமடித்து, ஆடைகளை மாற்றி முக மூடி யணிந்தவுடன் கன்னிகா ஸ்திரீகளுக்கு "பெண்களுக்கு இயற்கையாயுள்ள இச்சை" தணிந்து விட்டதென்று தப்பபிப்பிராயம் கொள்ளுகிறார்கள்.

சகல சுதந்திரமும் சௌகரியமும் படைத்த இதர பெண்களே சரியானபடி திருப்தி அடைந்து கொள்ளாமல் இருக்கும்பொழுது வேலையில்லாமலும், ஏகாந்தமாயும் இருக்கும்படி செய்யப்படுகிற கன்னிகா ஸ்திரீகளுக்கு மித மிஞ்சிய உணர்ச்சி ஏற்படுவது, இயற்கையேயாதலால், அவர்கள் நடத்தையைக்குற்றங் கூறுவது தவறு. ஆனால் மதத்தின் காரணமாய் இளம் பெண்களை இயற்கைக்கு மாறான கட்டுத் திட்டங்களுக்குள்ளாக்கி துன்புறுத்துவது கொடுமையிலும் கொடுமை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஏ! மதப்பேயே இன்னும் எத்தனை நாளைக்குத் தான் இப்படி மக்களைப்பிடித்தாட்டிக் கொண்டிருப்பாய்!!

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் ஸர். ஷண்முகம் அவர்கள் தமது கட்சியை விட்டு விலகியதானது இந்தியா தேசத்துக்கே ஓர் பெரும் நஷ்டம் என்றும் கூறி வருந்தியது ஷண்முகம் அவர்களின் தேச பக்தியிலல்லவா என்பதையும் தற்சமயம் சட்டசபையில் தலைவராக இருந்து எந்தக் கட்சியிலும் சேராமல் திரு வி. ஜெ படேலைவிடத் திறமையாக நிர்வாகம் நடத்தி வருவதையும், நடுநிலைமையிலிருந்து இம்மி கூட பிசகாது ஞாயம் செலுத்தி வருவதையும் ஓர் உண்மை இந்தியன் சந்தோஷப்படாமலிருக்க முடியுமா? நேற்றைய இந்தியசட்டசபையிலிருந்த ராணுவ மசோதா விஷமாய் சர். அப்துல் ரஹீம் கொண்டுவந்த திருத்தப் பிரேரணை விஷயமாய் தீர்ப்புக்கூறும்போது தலைவரின் தீர்ப்பானது ஆங்கிலேயர்களையே நடுங்கும்படி செய்து விட்டது. பார்ப்பனப் பத்திரிகைகளும், பார்ப்பன கோஷ்டிகளும் அயோக்கியத்தனமாக எழுதிவருகிறபடி ஸர் ஷண்முகமவர்கள் சர்க்காரின் தாசராக இருந்தால் இவ்வாறு தீர்ப்புக்கூற முடியுமா என்பதையும் இது போன்ற சமயங்களில் தேசத்தின் சுயமரியாதையைக் காப்பாற்ற வேண்டியது தான் உண்மை தேசபக்தனின் கடமையாகும் என்பதையும், இந்திய மக்களும் உணராமலில்லை. தமிழ் நாட்டுப் பார்ப்பனத் தேவதைகளில் யாராவது இம்மாதிரி தீர்ப்புக் கூறமுடியுமா என்று விகடனின் இனத்தாரையும், விகடனையும் பந்தயம் கட்டி சைபோட்டுக் கூப்பிடுகிறேன்.

இன்று திருவாங்கூர் ராஜ்யத்தில் யோசனைகர்த்தாவாக இருக்கும் ஸர். ஸி. பி. ராமசாமி ஐயரவர்களின் யோசனைப்படி திருவாங்கூர் அரசாங்கத்தில் காங்கிரஸ் இயக்கம் இருக்கக்கூடாது என்று சட்டம் விதித்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய கொடுமையான செய்கையை மறைமுகமாகச் செய்த ஸர். ஸி. பி. ராமசாமியைப்பற்றி ஏன் பத்திரிகைகளில் எழுத வில்லை என்றால் ஸர். ஸி. பி. ஐயர் அவர்கள் பூணூல் போட்டிருக்கிறார் என்பது தான் காரணமாகும் போலும். ஸர். ஷண்முகம் அவர்கள் தொகுதி மாறியதால் வாக்காளர்களுக்குதோழர் ஷண்முகம் அவர்களிடம் அவநம்பிக்கை ஏற்பட்டு விட்டதாக தூற்றுவது நியாயமாகுமா? இதற்கு முன் ஒவ்வொரு தலைவர்களும் தொகுதி மாறியிருக்கிறார்களே. அவர்களும் வாக்காளர்களின் நம்பிக்கை குறைவினால் தான் போலும். அப்படியானால் கோவை தொகுதியிலுள்ள வாக்காளர்களோ விவசாயிகளாவர். அவர்கள் எப்போதும் ஷண்முகத்தினிடத்து நம்பிக்கை யுடையவர்கள் ஆகையால் விவசாயிகளைவிட வியாபாரிகள்தான் தந்திரசாலிகள். அறிவு ஆற்றலிலும் உலக விஷயங்களிலும் கெட்டிக்காரர்களாகவும் இருப்பார்கள். அப்படிப் பட்ட வியாபாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரராக சர் ஷண்முகம் அவர்கள் இருக்கும்போது விவசாயிகள் நம்பிக்கை வைக்கமாட்டார்கள் என்று விகடன் கூறவந்தது அதன் வாயை அடக்காது விட்டு விட்டதாலன்றோ. இதற்குமுன் வர்த்தக அங்கத்தினராக இருந்த ஜனப் ஜமால் முகம்மது அவர்களும், வித்தியாசாகரப்பாண்டியாவும் சர் ஷண்முகம் அவர்கள் சென்னை வர்த்தகத் தொகுதிக்கு நிற்கப் போவதைக் கண்டு சந்தோஷங்கொண்டு தம் தொகுதியை விட்டுக்கொடுத்து விலகி நிற்பது சர். ஷண்முகம் அவர்களிடம் கொண்ட நம்பிக்கையினாலும் அவர்களின் வர்த்தகத் திறமையினாலுமன்றோ. வித்தியா சாகரபாண்டியாவை பிடித்து ஸர். ஷண்முகத்துக்குப்போட்டியிடச் செய்த சூழ்ச்சி குள்ள நரி ராஜகோபாலாச்சாரிக்கும், சத்தியமூர்த்திக்கும் பலிக்காமல் போகவே, பார்ப்பனரல்லாதவரில் பெரியாரான ஸர் ஷண்முகமும் போட்டி யின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார் என்னும் பெருமையை பார்ப்பனரல்லாத ஒரு வருக்கு விட்டுக் கொடுக்கக்கூடாது என்னும் கெட்ட எண்ணத்தால், காங்கிரஸ் வாதி நானல்ல என்று கூறிக்கொண்டிருந்த சாமி வெங்கடாஜலம் செட்டியாரவர்களைப்பிடித்து போட்டியாக நிறுத்திய பார்ப்பன பகட்டர்களின் தந்திரத்திலகப்பட்டு தவிக்கும் சாமி வேங்கிடாஜலம் செட்டியாரவர்கள் நன்றாய் யோசித்துப்பார்ப்பாரானால் பார்ப்பனரல்லாதவரின் பெருமையை கை நழுவ விடமாட்டார் என்பது திண்ணம். ஸர். ஷண்முகத்துக்கு எதிரியாக ஓர் பார்ப்பனரை நிறுத்தியிருப்பார்களானால் தோல்வி நிச்சயம் என்று தெரிந்து தான் பார்ப்பனரல்லாதவரை நிறுத்தி தோற்றுவிட்டாலும், சாவல்கூவி கோழி தலையில் வைத்ததைப்போல, காங்கிரஸ் தோல்வியடைந்துவிட்டது என்று பாரத்தையும் பழியையும் காங்கிரஸ் பேரிலும், பார்ப்பனரல்லாதவர் பேரிலும் சுமத்திவிடலாம் என்று நினைத்திருக்கிறார்கள் என்பதை சாமி வெங்கிடாசலத்துக்கு ஞாபகமூட்டவேண்டியது அவசியமாகிறது. விகடனுக்கும், அவன் இனத்தவர்களுக்கும், ஸர். ஷண்முகம் அவர்கள் வெற்றி பெறக்கூடாது என்பது முக்கிய நோக்கமாக இருக்கிறது.

மேலும் விகடன் இனத்தாருக்கு ஸர். ஷண்முகம் சட்ட சபையில் தலைவர் பதவியை பெற்று விடுவார் என்னும் பயம் மனதிலிருப்பதால் ஸர். ஷண்முகம் வர்த்தகத் தொகுதியில் அபேட்சகராக வந்து சட்டசபைத்தலைவர் பதவியை ஏற்றுக்கொள்வாரானால், வர்த்தகர்களின் நன்மையைக் கவனிக்க முடியாது போய்விடும் என்று வர்த்தகர்களின் நன்மைகளைத் தாங்கி நிற்கும் தூண்களைப் போல்பாசாங்கு செய்து விகடன் பசப்புவதைக்கண்டு சிரிப்பதா? அல்லது அழுவதா? என்றுதெரியவில்லை. இம்மாதிரியான பசப்பு வார்த்தைகளால், வர்த்தக அறிஞர்களை மயக்கிவிடலாம் என்று மனப்பால் குடிப்பார்களானால் வர்த்தக அறிஞர்கள் விகடன் இனத்தவர்களின் அறிவிலும் தாழ்ந்தவர்கள் அல்ல என்பதை விகடனுக்கும், அவன் இனத்தாருக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு தொகுதியிலுள்ளவர்களும் அவரவர்கள் நின்ற தொகுதிக்கு வேண்டிய நன்மைகளை நிர்ணயம் செய்துகொள்ள முடியுமா என்று நான் கேட்கிறேன். ஓர் விஷயத்தைப்பற்றி முடிவு செய்யுமுன் எல்லா அங்கத்தினர்களும் ஒன்று சேர்ந்து கூடிக்கலந்தாலோசித்து ஓர் முடிவுக்கு வருகிறார்கள். அப்போது தலைவராயிருந்தாலும் சரி, அங்கத்தினராயிருந்தாலும் சரி. அவரவர்கள் செய்யவேண்டிய தேச ஊழியத்தை செய்யாமலிரார். அதிலும் சர். ஷண்முகமோ, பார்ப்பனர்களைப்போல் செய்நன்றி மறப்பவர் என்று எவரும் கருதார். ஆகையால் தன்னை நம்பி தேர்ந்தெடுத்த வர்த்தகர்களின் மனம் சந்தோஷமடைய எதைச் செய்ய வேண்டுமோ அதை செய்து முடிப்பதில் பின் வாங்காத வீரர் என்பதை வர்த்தக உலகம் அறிந்ததாலன்றோ இதற்கு முன் வர்த்தகத் தொகுதியின் சார்பாக இருந்த தோழர் ஜமால் முகம்மதுவும், வித்தியாசாகரப்பாண்டியாவும், ஸர் ஷண்முகம் அவர்களுக்குத் தம் தொகுதியை விட்டுக்கொடுத்து ஸர். ஷண்முகம் அவர்களுக்கு ஆதரவு கொடுத்திருப்பதையும் சென்னை வர்த்தகர்கள் அறிந்து நடந்து கொள்வார்களே ஒழிய, பார்ப்பனரின் பசப்பு வார்த்தைகளில் மயங்கி விடமாட்டார்கள் என்பதை நடக்கப்போகும் தேர்தலிலிருந்தாவது விகடன் அறிந்துகொள்ளலாகும். இதிலிருந்தாவது விகடனின் இனத்தவருக்குப்புத்தி புகட்ட முன் வரவேண்டியது பார்ப்பனரல்லாதவர்களின் முதற் கடமையாகும். ஆகஸ்ட்டு மீ 2ந்தேதிய தமிழ் நாட்டில், சட்டசபைத் தலைவருடன் போட்டி போடுவது நேர்மையா, என்னும் தலைப்பின் கீழ் டைம்ஸ் பத்திரிகையின் நிருபர் எழுதியிருப்பதைக் கவனித்தால் சாமி வெங்கிடாசலம் செட்டியாரை ஸர். ஷண்முகம் அவர்களுக்கு எதிரியாக நிறுத்தியிருப்பதிலிருந்து பார்ப்பனரல்லாத ஓர் தலைவரை அவமானப்படுத்தச்செய்த ஓர் சூழ்ச்சியேயாகும். இச்சூழ்ச்சியில் சாமி வெங்கிடாஜலம் அவர்கள் சிக்கிக்கொண்டாலும், இதர வர்த்தக சகோதரர்கள் அகப்பட்டுக் கொள்ளாமல் எச்சரிக்கையாயிருந்து தம் தம் வாக்குரிமைகளை ஸர். ஷண்முகம் அவர்களுக்கே கொடுத்து பார்ப்பனால்லாதவரின் பெருமையைக் காப்பாற்றும் பொறுப்பை சென்னை வர்த்தகர்கள் ஏற்றுக்கொண்டு தம் கடமைகளைச் செய்யத் தவறார்கள் என்றே கருதுகிறேன்.

நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை.

(ஒரு நவீன நாடகம்.)

ஆக்கியோன்:
தோழர் சி. எ. அய்யாமுத்து அவர்கள்.
இதன் விலை அணா 8.
முன்பணம் அனுப்பவும். வி. பி. இல்லை.
தபால் செலவு இனம்.
விலாசம்:— மானேஜர்,
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

முந்துங்கள்! முந்துங்கள்!!

தமிழ்நாட்டுப் பெற்றோர்களே!!!

தங்கள் பிள்ளைகள் நேரில் ஸ்கூலில் படிக்க சந்தர்ப்பமில்லாத பக்ஷம், தபால் மூலம் நமது ஸ்பெஷல் மெட்ரிகுலேஷன் கோர்ஸ்களை மாதா மாதம் சொற்ப தொகை அனுப்பிப் படிக்கலாம். விரும்பினால் சர்க்கார் கே. சீனியர் பரீக்ஷை பாஸாகி காலேஜில் சேரலாம். அல்லது டாக்டர், லாயர், இஞ்சினியர் வேலைகளுக்கும் படிக்கலாம். 9, 10 வகுப்பு படித்தவர்கள், லோயர், ஹையர் உபாத்திமார்களுக்கு அதிக பிரயோஜனமானது. விபரங்களடங்கிய புஸ்தகத்திற்கு $\frac{3}{4}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

அன்பையன்ஸ் காலேஜ்,
ஆறுமுகனேரி S. I. R.

## மந்திரம் என்பது பொய்.

### ரூ. 10000 பந்தயம்.

இந்தியாவிலே வருஷமொன்றுக்கு 5 லக்ஷம் பேர்கள் பாம்பு கடித்துச் செத்துப் போகிறார்களென்று தெரிய வருகிறது.

ரத்னகிரி ஜில்லாவிலே ஓர் கிராமத்தில், சென்ற வாரத்தில் மட்டும் இருவர் பாம்பு கடித்ததால் மரணமடைந்திருக்கிறார்கள்.

காடுகளுக்குப் பக்கத்திலுள்ள கிராமாந்திரங்களிலேயும், வயல் புறங்களிலேயும் பாம்புக்கடி அதிகமாக இருக்கிறது. மழை காலத்திலும், அறுவடை காலத்திலும் பாம்புக்கடி விபத்துகள் அதிகமாக இருக்கின்றன. நாகப் பாம்பு தீண்டியே பெரும் பான்மையோர் மாளுகிறார்கள்.

பாம்புக்கடி சிகிச்சை முதலியவைகளைப்பற்றி கிராம வாசிகளுக்கு போதிக்கும்படி ஜில்லா வைத்திய அதிகாரிகளுக்கு சர்க்கார் உத்தரவுகள் பிறப்பித்து வருகிறார்கள். ஆனால் கிராம வாசிகள் வைத்திய அதிகாரியின் சிபார்சைச் சாதாரணமாகப் பின்பற்றுவதில்லை. பாம்பு கடிக்கு மந்திர மூலம் சிகிச்சை பெறலாமென்றே நம்பி, கிராம வாசிகள் மந்திரித்துக்கொள்ளுகிறார்கள்.

மாதம் ரூ 40 சம்பளம் கொடுத்தால், மந்திரத்தின் மூலம் பாம்புக்கடியை நிவர்த்திப்பதாக டாக்டர் தேவி கௌரிசங்கரர், ஆமதாபாத் முனிசிபாலிட்டிக்கு மனு செய்து கொண்டார். ஆனால் முனிசிபாலிடியார் ஷை மனுவை நிராகரித்து விட்டார்கள்.

ஹாப்கைன் வைத்திய ஸ்தாபனத்தார் பாம்புக் கடிக்கு ஒருவித மருந்தை தயாரித்திருக்கிறார்கள். மந்திர தாயத்து மூலம் பாம்பு தீண்டிய ஓர் குரங்கை பிழைக்க வைத்தால் ரூ. 10,000 கொடுப்பதாக ஷை ஸ்தாபனத்தார் அறிவித்துள்ளனர்.

(த-நா)

## ஜனனம்.

திருச்சி செங்குளம் பென்ஷனர் தெருவிலிருக்கும் தோழர். ஜெ. எ. சிங்கராயர் அவர்கள் துணைவி, அந்தோணியம்மாளுக்கு 11—4—34ல் ஆண்மகவு ஜனனமானது. குழந்தைக்கு "செனிக்யூ" என்று பெயரிடப்பட்டது. ஷையூர் ஷை தெருவிலிருக்கும் தோழர் எல். மரியதாஸ் அவர்கள் துணைவி பஷுவீனம்மாளுக்கு 21—5—34ல் ஆண்மகவு ஜனனமானது, குழந்தைக்கு "லெனின்" என்று பெயரிடப்பட்டது.

## திருநெல்வேலி ஜில்லா விஸ்வகர்ம முதல் மகாநாடு

அம்பாசமுத்திரம் தாலுகா வீரவநல்லூர் ராஜராஜேஸ்வரி சன்னதியில் 8-9-34ந்தேதி இரவு 8 மணிக்கு வீரவநல்லூர் வக்கீல் தோழர் வி. எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியார் பி. எ. பி. எல். அவர்கள் தலைமையில் விஸ்வகர்ம பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. தோழர் எ. முத்துகிருஷ்ணன் அவர்கள் சங்கீதம் பாடிய பிறகு தோழர்களான என். பரமசிவாச்சாரி, கௌரவ மாஜிஸ்ட்ரேட் வி. எஸ். எம். சுப்பிரமணியம் செட்டியார், செங்குந்தர் ஸ்கூல் மானேஜர் எ. எம். ஆறுமுக முதலியார், எ.சிவனாச்சாரி, பி. முத்தையா ஆசாரி முதலியவர்கள் பல அரிய விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள்.

பின் மகாநாட்டு விஷயமாக சில தீர்மானங்கள் நிறைவேறிய பின் வந்தனோபசாரம் கூறியதும் கூட்டம் கலைந்தது.

(காரியதரிசி)

## சுயமரியாதைத் திருமணம்.

திருமங்கலம் வையூவி அம்மாபட்டியில் 27-8-34ந்தேதி மாலையில் மதுரை தோழர் ஏ. பி. முகம்மது சுல்தான் எம். ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் கொட்டாணிபட்டி கர்ணம் தோழர் எஸ். சங்கரலிங்கம் அவர்கள் குமாரத்தி தோழர் பாப்பாத்திக்கும், தோழர் ரா. குருசாமிக்கும் வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் சிறப்பாக நடந்தது.

திருமணத்திற்கு ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். பின் கோவாப்ரேடிவ் ஸீனியர் இன்ஸ்பெக்டர் தோழர் எம். எஸ். நாதன் அவர்கள் சடங்குகள் ஒழிந்த திருமணம் என்பது என்ன என்பதை விளக்கமாகப் பேசினார். பின்னர் மணமக்களை தங்கள் தங்கள் ஒப்பந்த உறுதி மொழிகளை கூறும்படி தெரிவித்தார். மணமகனும், மணமகளும் உறுதி மொழிகளை கூறினார்கள். மணமக்களிருவரும் ஒருவருக்கொருவர் மாலையணிவித்து தாலி கட்டப்பட்டது. பின்னர் தோழர் ஏ. பி. முகம்மது சுல்தான் எம். ஏ. பி. எல். அவர்கள் "புரோகிதத்தையும், மூடச்சடங்குகளையும் ஏன் ஒழிக்க வேண்டும், இயற்கைத் திருமணத்தின் அவசியம்" என்பதுபற்றி மிகவும் தெளிவாக பாமரர்களுக்கும் நன்கு விளங்கும்படியாக பேசினார். பின் தோழர் எம். எஸ். நாதன் அவர்களும் டாக்டர் பாண்டியன் அவர்களும், "சடங்குகளின் ஆபாசமும்" "சுயமரியாதைத் திருமணத்தின் அவசியமும்" என்பனபற்றிப்பேசினார்கள்.

முடிவாக தோழர் எஸ். சங்கரலிங்கம் அவர்களால் வந்தனோபசாரம் கூற இரவு 1 மணிக்கு மணநிகழ்ச்சி இனிது நிறைவேறியது.


கொடிய கர்ம வியாதிகளை நிவர்த்தித்துக்கொள்ள மன்னார்குடி

**யானைக்கால் குஷ்டம்**

ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்யுங்கள். ஏழைக்கு தர்ம வைத்தியம்.

யானைக்கால் குஷ்டத்திற்கு 40 வேளைக்கு தாம்பிர மெழுகு ரூ. 10

பல்வியாதிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ணா டெண்டல்பாம் பற்பொடி 2½ அணா.



**பெண்ணுரிமைக் கீதங்கள்.**

தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் கடலூர்சிறையில் இயற்றியது.

விலை அணா 0—1—0.

கிடைக்குமிடங்கள்:—

**குடி அரசு பதிப்பகம்,**
ஈரோடு.

**R. கிஸன்,**
கோவை.



**சமதர்மக் கீதங்கள்.**

தோழர் ப. ஜீவானந்தம் இயற்றியது.

விலை பை. **6.**


கிடைக்குமிடங்கள்:—

**குடிஅரசு பதிப்பகம்**
ஈரோடு.

**சமதர்மக் காரியாலயம்**
ஜோலார்பேட்டை.



ரூ. 2—4—0க்கு 3 கெடியாரங்களும், 14 காரட் ரோல்டு கோல்டு நிப் உடன் ஒரு பவுண்டன் பேனாவும் 132 வெகுமதிகளும்.




எங்கும் புகழும் பிரக்யாதியும் பெற்ற ரோஜா புஷ்ப வாசனை செண்ட் (அத்தர்) பாட்டல் 6க்கு விலை ரூ. 2-4-0. ஒரே தடவையில் 6 பாட்டல் வாங்குகின்றவர்களுக்கு ஒரு ரயில்வே ரெகுலேட்டர் ஊமை (போலி) பாக்கட் கெடியாரமும், 5 வருஷ உத்திரவாதமுள்ளதும் கெட்டியான வேலைப்பாடமைந்ததுமான B-டைம்பீசும், ஒரு தங்க முலாம் பூசிய ஊமை (போலி) ரிஸ்ட் வாட்சும், ஒரு தங்க நிப்பு உள்ள பவுண்டன் பேனாவும், ஒரு அழகான முத்து மாலையும் 128 பலவித சாமான்களும் இனாமாக அனுப்பப்படும்.

பாக்கிங் & தபால் கட்டணத்திற்கு அணா 0—14—0.

The American Commercial Store,
Post Box No. 12213 Calcutta (K)



**அறிவியக்கப் பத்திரிக்கைகள்.**

—0—

நாகர் கோவிலிலிருந்து தோழர் பி. சுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்களை ஆசிரியராகக்கொண்டு

**"தமிழன்"**

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளி வருகிறது.

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூ. | 3—0—0 |
| 6 மாதம் | ,, | 2—0—0 |
| 3 மாதம் | ,, | 1—4—0 |

மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.



**"தமிழன்"**

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.

உள் நாடு ரூ. 3—0—0
வெளிநாடு ரூ. 5—0—0

விலாசம்:—

மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார்தங்கவயல்.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

முன்னுள்ள "தீர்க்கதரிசிகள்" இடமும் "அசரீரி" மூலமாக குசு குசு மந்திரம் ஓதுவதும், மற்றவர்களிடம் இந்த மந்திரத்தை ஓதாமல் இருப்பதுமேன்? கடவுள் தீர்க்கதரிசிகளிடம் சொல்லுவதை பொது ஜனங்கள் எல்லோருக்கும் கேட்க பஹிரங்கமாகச்சொல்லி விட்டால் கடவுளுக்கும் ஒரு தொல்லையுமில்லை. இவ்வளவு சுருக்கமான வழிவகைகளைக்கையாளாமல் பூகம்பங்களையும், வெள்ளப் பெருக்கையும், எரிமலைகளையும், இடியையும், பஞ்சத்தையும், நோய்களையும் உண்டு பண்ணி சிறியவன்—பெரியவன், ஆண்—பெண், நல்லவன்—கெட்டவன், நாஸ்திகன்—ஆஸ்திகன் எல்லோரையும் ஞாயமற்ற முறையில் அழித்து நாசப்படுத்துவதென்றால் இக் கடவுளை சர்வ ஞானமுள்ளவர் என்று கூற முடியுமா? அருள், அன்பு, நீதி, கருணை முதலிய குணங்கள் நிறைந்த ஓர் கடவுளுக்கு இது யோக்கியமா?

உலகத்தில் எந்த அரசாங்கத்தாராலும் குற்றம் செய்தவர்களை மாத்திரம் தான் தண்டிக்கிறார்களேயன்றி ஒரு தேசத்தில் ஒரு சிலர் செய்த குற்றத்திற்காக வேண்டி அத்தேசத்திலுள்ள குற்றம் செய்யாத மக்களையும், குற்றம் செய்தவர்களுடன் சேர்த்து தண்டிக்கின்றார்களா என்று கேட்கின்றேன். ஒரு பைத்தியக்காரன் கூட இந்தப்படி செய்யப்போவதில்லை, அப்படி ஒரு அரசாங்கம் செய்யுமே யாகில் இன்றைக்கு பொது ஜனங்கள் அவ்வரசாங்கத்தை நீதியுள்ள அரசாங்கம் என்று ஒப்புக்கொள்வார்களா? ஆனால் அத்தகைய அரசாங்கத்தைப் பகுத்தறிவற்ற, அயோக்கியத்தனமான, அரக்கர்களின் அரசாங்கம் என்று தான் சொல்வார்கள். ஆனால் பக்த கோடிகள் சொல்லும் "உலகத்தின் சர்வாதிகாரியாகிய கடவுளின் நிலைமையும் இப்படித்தான் தெரிகின்றன.

எனவே நாம்மேலே ஆராய்ந்தவைகளை ஊன்றிப்படித்து அதிலிருந்து எல்லாம்வல்ல—எங்கும் நிறைந்த—சர்வ சக்தியும்—சர்வ ஞானமும்—அருளும்—அன்பும்—நீதியும் உள்ள ஓர் கடவுள் இப்பிரபஞ்சத்திற்கு காரணமாயும்—கர்த்தாவாயும் இருக்கிறாரா? இல்லையா? என்பதை பகுத்தறிவுகொண்டு முடிவு செய்து கொள்ளுங்கள்.

---


மலையாளம் சில்க்.

2¼-வீதி. 5-நீளம் பட்டு 1-க்கு ரூ. 1-6
ஷை கம்பிக்கரை டஜன் 1-க்கு " 14-0
ஷை 4½-நீளம் டஜன் 1-க்கு " 10-0
3-வீதி. 8-நீளம் வேஷ்டி 1-க்கு " 3-8

S. K. R. வீவிங் பாக்ட்டரி,
கோட்டார், திருவிதாங்கூர்.


## திருச்சி சுயமரியாதைச் சங்கம்.

9-9-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு திருச்சிசுயமரியாதைச் சங்கப் புது வருட தேர்தல் நடத்த வேண்டி தோழர் எஸ். நீலாவதி அவர்கள் இல்லத்தில் அங்கத்தினர்கள் பொதுக்கூட்டம் கூடியது. பெரும்பாலான அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தார்கள். அது சமயம் கூட்டத்திற்கு தோழர் எஸ். நீலாவதி அவர்கள் தலைமை வகித்தார்கள். புது வருடத்திற்கு அடியிற் கண்ட நிருவாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப் பட்டார்கள்.

தலைவர்:—தோழர் எஸ். நீலாவதி.

உப தலைவர்கள்:—தோழர்கள் கே. என். வாசுதேவன், டி. எஸ். எ. வேணுகோபால்.

காரியதரிசிகள்—தோழர்கள் கெ. கலியபெருமாள், என். சங்கரன்.

பொக்கிஷதார்:—தோழர் ராம சுப்பிரமணியம்.

நிருவாக சபை அங்கத்தினர்கள் தோழர்கள். இராமச் சந்திரன், தி. திரவியம், எ. எ. கிரி, பி. நடராஜன், டி. சம்பந்தம், ஆர். பெருமாள், எம். கிருபாபுரி, செல்வ கணபதி, இராமானுஜம், டி. கே. இராமு, எஸ். அபிமன்யூ முதலியவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள் அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

### தீர்மானம்.

முனிசிபல் ஸ்பெஷல் ஆபிசர் அவர்கள் முனிசிபல் எல்லைக்குள் பொது ஜனங்களுக்கு இடையூறாக தப்புத்தாரைகள் விளம்பரத்திற்காக அடிப்பதை தடுக்கும் வண்ணம் ஏற்படுத்தியிருக்கும் உத்திரவுக்காக ஸ்பெஷல் ஆபிசருக்கு இக்கூட்டம் நன்றி பாராட்டுகிறது என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

அடுத்த நிருவாகசபைக் கூட்டம் 23—9—34-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு தோழர் எஸ். நீலாவதி அவர்கள் இல்லத்தில் நடைபெறுமென்று காரியதரிசி அவர்களால் அங்கத்தினர்களுக்கு கூறப்பட்டு வந்தனோபசாரத்துடன் இரவு 9-30 மணிக்குக் கூட்டம் கலைந்ததெனக்காரியதரிசிஎழுதுகிறார்.

---


## ஏஜண்டு தேவை.

சென்னையில் நமது "பகுத்தறிவு" வாரப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மனேஜர்
"பகுத்தறிவு" ஈரோடு.


# உழைப்பாளர் மாட்சி.

(தோழர் தி. அ. வேங்கடசாமிப்பாவலர்.)

"கதர்க்கப்பல் கொடி தோணுதே" என்ற மெட்டு.

பல்லவி.

உழைப்போர்க்கே மதிப்பீகுவோம்
உழைப்பில்லா ஏய்ப்பரின் வீண்
உறுமலுக்கஞ்சிடாதே (உழைப்)

அநுபல்லவி.

இழைக்கும் தொழில்களால் எப்
பொருள்களும் ஈந்தும் அந்தோ!
கொழுக்கும் முதலாளரால்
கொடுமைக் கடிமையானார் (உழைப்)

சரணங்கள்.

(1) பழக்கம் வழக்கம் புண்யம்
பாவம் நரகம் மோட்சம்
குழப்பும் கடவுள் மதம்
குருக்களினும் தூர்விச்சம்
கூழிமூடி—உய்யும்
வழிநாடி—உண்மைத்
தொழில் தேடிச்—சற்
றேய்வுமிலா தெந்நாளும் (உழைப்)

(2) முழக்கும் முதலாளித்வம்
மூடச்சடங்கு தத்வம்
விளர்க்கும் புராணம் வேதம்
வீழ்த்தியே சிங்கநாதம்
புரிந்தாரே—ரஷ்யர்
அறிந்தாரே—மிகப்
பரிந்தாரே—சோ
சலிசமெங்கும் பெய்தாரே (உழைப்)

(3) பாசி படர் ஜாதீயம்
பட்டம் பதவி மோகம்
வீசி எறிந்து மேதே
சிய நிறுவுத் வேகம்
தொழில் ஒன்றே—நலம்
தரும் என்றே—ஒரு
நிலைநின்றே—சற்றும்
தாமதிக்காமல் இன்றே (உழைப்)

(4) ஆசற்ற தியாகிகளின்
அறவுரை பின்பற்றியே
மாசற்ற சமதர்மம்
வளர்க்கிலுண்டாம் வெற்றியே
மகிமீதே—இன்பம்
சுகியாதே—துன்பம்
சகியாதே—தம்
சொந்த நலம் பேணுதே (உழைப்)

---

## லண்டனில் சமரச சங்கம்.

லண்டன்மா நகரத்தில் ஒரு சமரச சங்கம் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம். அச்சங்கத்தின் முதல் வேலை பொருளாதார விஷயத்தில் உயர்வு, எல்லா மக்களுக்கும் பொருள் சமத்துவமாய் இருக்கும்படி செய்வதாம். இதற்குக் கிளைச்சங்கம் ஒன்று இந்தியாவில் பம்பாயில் ஏற்பட்டிருக்கிறதாம். அதை நாம் மனப்பூர்வமாய் வரவேற்பதோடு ஒவ்வொரு கிராம மூலை முடுக்குகளிலும் இம்மாதிரி சமரச சங்கம் ஏற்படவேண்டுமென்றும் விரும்புகின்றோம்.

---

## மரணம்.

திருச்சி புரோகித மறுப்பு சங்கக்காரியதரிசி தோழர் ச. ம. சி. பரமசிவம் அவர்களின் 3மாதப் பெண் குழந்தை 9-9-34-ந்தேதி இரவு 1மணிக்கு பாளையங்கோட்டையில் மரணமடைந்துவிட்டது.

(நமது நிருபர்)

# பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

## பெண் ஏன் அடிமையானுள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணு 5.

## முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் K. M. பாலசுப்பிரமணியம் B.A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 5.

## நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட்ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணு 3.

## மதம் என்ருல் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 2.

## கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின் தன்மைகளையும் உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணு 5.

### மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது எனபதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணு 3.

### நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாதவனுயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிருர். விலை அணு 3.

## பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணும வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 3.

## குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து வந்தபின் குடி அரசில் எழுதிய தலையங்கங்களையும், பல மகாநாடுகளில் பேசிய பேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணு 6.

## பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

இது பாவ மன்னிப்பின் பேரால் நடந்து வந்த அக்கிரமங்களை அனுபவத்தில் கண்டவரான பாதிரி சேனிக்யூ அவர்கள் தம் அனுபவத்தை ஆங்கிலத்தில் எழுதிய புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. இதைப் படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும், பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணு 3.

## பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் தத்துவத்தையும் இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 3

## மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இந் நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது விலை அணு 3.

## "மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

இந்நூல் சென்னை தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் குடி அரசில் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகளை தொகுத்ததாகும். இது, நோயும் கடவுள் சக்தியும், மந்திரத்தால் நோய் தீருமா? மதங்களால் ஏதேனும் பயன் உண்டா?, மூட நம்பிக்கையின் கொடுமை என்பனபோன்ற பல அரிய விஷயங்களைக்கொண்ட சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணு 6.

### இரண்டாம்பாகம்

சுமார் 116 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணு 5.

## நான் நாஸ்திகன் ஏன்?

இப் புத்தகமானது தோழர் பகத்சிங்கு, அவர்கள் தான் எவ்வாறு நாஸ்திகரானுர் என்பதுபற்றியும், ஏன் நாஸ்திகரானுர் என்பது பற்றியும் லாகூர் சதிவழக்கு விசாரணைக்காலத்தில் சிறையிலிருக்கும்போது எழுதியதாகும். அருமையான கருத்துக்களும் தெளிவான உதாரணங்களும் கொண்டது. விலை அணு 3.

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)

விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

## பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.

அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intellegent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். எ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும். விலை அணா 2.

## பர்னார்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னார்ட்ஷா அவர்கள் அமெரிக்காவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணா 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது.

விலை அணா ½.

## மநுநீதி விளக்கம்.

விலை அணா 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணா 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணா 2.

## சுயமரியாதைப் பாடல்

விலை அணா 2.

## கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 2.

## சுயமரியாதை தாலாட்டு

விலை அணா 2.

## சோதிடப் புரட்டு

விலை அணா 2.

## கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணா ½.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.